தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 1 | தி. பி. 2014 சுறவம் 10 (23 - 1 - 1983) விலை 65 காசு | இதழ் எண்: 10 | பகுதி 11-12

★ சமசுக்கிருதத்தை உலகமொழியாக்கும் முயற்சிகள் !

★ 800 கோடி உருபா ஒதுக்கப் பெற்றுள்ளது!

★ புதுவை, அரவிந்த ஆசிரமம் ஏற்பாடு !

ஆர். எசு. எசு., விசுவ இந்து பரிசத்- கூட்டுத் திட்டங்கள் அம்பலம் !

தமிழ்நிலப்பகுதிகளைப் படிப்படியாகக் கவர்ந்துகொள்ளும் அரவிந்த ஆசிரமத்தைப் பற்றித் திடுக்கிடும் தகவல்கள் !

சென்னை. சன. 19: புதுச்சேரியிலுள்ள அரவிந்தர் பாழி (ஆசிரமம்) ஒரு தனியார் நிறுவனம். மறைந்த அரவிந்தர் அவர்களின் பெயராலும் உரிமையாலும் இயங்கும் ஒரு பொறுப்புக் குழுவால் இயங்குவது. அதற்கு உளநாட்டிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும், பல்லாயிரக்கணக்கான உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் நன்கொடையாளர்களும புரப்பாளர்களும் ஏராளமான பேர்கள் உண்டு. அதற்குப் பல ஆயிரங்கோடி உருபா மதிப்புள்ள சொத்துகளும் வீடுகளும், மனைகளும், தோட்டங்களும், வயல்களும் நாடெங்கிலும், உலக நாடுகளெங்கிலும் உண்டு.

புதுச்சேரியின் பரப்பளவில் ஏறத்தாழ மூன்றில் ஒருபங்கு நிலமும் வீடுகளும் விளை நிலங்களும அதற்குச் சொந்தமாக இருக்கின்றன என்றால் மிகையாகாது. புதுச்சேரியில் உள்ள வீடுகளிலும் கட்டடங்களிலும் கருநீலமும், வெள்ளையும் கலந்த வண்ணத்துடன் விளங்குபவை அனைத்தும் அரவிந்தர் ஆசிரமத்துக்குச் சொந்தமானவையே! அதில் ஒருவர் உறுப்பினர் ஆக வேண்டுமென்று விரும்பினால், அவரிடம் உள்ள அனைத்து உடைமைகளையும் அவர் ஆசிரமத்துக்கு எழுதிவைத்து விட்டு, அதில் சேர்ந்துகொள்ளலாம், அதன் பின் அவருக்கும் அவர் குடும்பத்துக்கும் ஆசிரமமே வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பளிக்கும். அவர் ஆசிரமத்தில் உள்ள ஆயிரக்கணக்கான புதுமுறைத் தொழிற்சாலைகள், கைத்தொழிற் கூடங்கள், அமைப்புகள், பள்ளிகள், கல்லூரிகள், விளையாட்டு, உடற்பயிற்சி மன்றங்கள்— இவற்றுள் ஏதாவது ஒன்றில் சேர்ந்து தன் உழைப்பையும் குடும்பத்தினர் உழைப்பையும வாழ்நாள் முழுவதும் ஆசிரமத்துக்கே தரவேண்டியதுதான். அவர்க்கும் அவர் குடும்பத்தில் உள்ள உழைக்கும் உறுப்பினர்களுக்கும் இவ்வுழைப்புக்கென ஒரு சிறு அளவு ஊதியமும் தரப் பெறும். உணவு, உறையுள் இலவயம். குடும்பத்தில் உள்ள கல்விகற்கும் குழந்தைகளுக்கு அங்கேயே கற்கும் வசதிகள் உண்டு. மருத்துவமனை முதலிய அனைத்து வாழ்வியல் தேவைகளுக்கும் ஆசிரமத்தைச் சேர்ந்த ஒருவர் வெளியாரையும் வெளியிடத்தையும் நாடிப்போக வேண்டாதபடி, எல்லா நிலைகளுக்கும், அது நிலைக்களனாக அமைந்துள்ளது.

உணவு விளைவு, உடை நெய்வு, உறையுள், கட்டுமானம, கல்வி, கலை முதலிய தொழிலமைப்புகள், விற்பனைக்கூடங்கள் முதலிய அனைத்தும் திட்டமிட்டு ஆசிரமத்தாரால, ஒரு தனி அரசு போல்இயக்கப்பெறுகின்றன. அவர்களுக்கென்று தனிநடைமுறை; சட்டதிட்டங்கள்! அரசின எந்த ஓர் ஆட்சி அதிகாரமும் அவர்களைத் தீண்டுவதில்லை. அங்கு உறுப்பினராகியிருப்பவர் பெரும்பாலும் வங்காளிகள், அசாமியர்கள், பஞ்சாபிகள், குசராத்தியர் போலும் வடநாட்டினர்களே! தமிழர்களை மருந்துக்கும் உறுப்பினர்களாக விடுவதில்லை. தமிழர்கள் எனப்படுவோர் ஆசிரமத்திற்குள் நுழைந்து வர வாய்ப்புண்டு என்றால், அது எடுபிடி வேலைகளுக்காகவே ஆகும்.

இத்தகைய தனி வல்லாண்மையுடைய ஆசிரமம், புதுச்சேரியிலுள்ள விளை நிலங்கள், கட்டடங்கள், வீடுகள் முதலியவற்றை, அவற்றை விற்பனை செய்வர்களிடமிருந்து ஒன்றுக்குப் பத்தாக விலை கொடுத்து வாங்கி அவற்றைத் தன் சொத்தாக ஆக்கிக்கொண்டு, அவற்றின் மேல் தன் முத்திரையைப் பதித்து விடுகிறது. இந்தநிலை கடந்த ஐம்பது ஆண்டுகளாக நடந்து வருகிறது. இந்த அரவிந்த ஆசிரமத்தால் புதுச்சேரியே படிப்படியாக, வடநாட்டினரின் கைகளுக்குப் பறிபோய்க் கொண்டிருக்கிறது.

இதை அங்குள்ள எவரும் தட்டிக்கேட்க இயலாதபடி, ஆசிரமத்துடன் பல நடுவண் அரசு அமைச்சர்கள், மேனிலை அதிகாரிகள் தொடர்பு கொண்டுள்ளனர். மறைந்த பண்டித சவர்கர்லால் நேரு முதல் எந்தத் தலைமையமைச்சர் ஆட்சிப்பொறுப்பு ஏற்றாலும் ஆசிரமத்தின் ஆளுகைக்கு மாறுபட்டவர்களாக இயங்க முடியாதபடி, அவர்கள் ஆசிரமத்துக்காரர்களால்

(3-ஆம் பக்கம் பார்க்க)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும்
உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

பெரியார் மாவட்டம் பவானியில் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் திருக்குறள் தொடர் சொற்பொழிவு

நிகழ்ச்சிச் சுருக்கம்

(நம் செய்தியாளர்)

ஏற்கனவே அறிவித்தபடி, பவானி, பாவேந்தர் இலக்கியப் பேரவை சார்பாக, பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களைக் கொண்டு, பவானி கழற் கழக அரங்கத்தில் (Rotary Hall) கடந்த 24—12—82 முதல் 2-1-83 முடிய, ஒவ்வொரு நாளும் மாலை 6-30 மணி முதல் திருக்குறள் தொடர் சொற்பொழிவு இனிதே நடைபெற்றுச் சிறப்புற நிறைவுற்றது.

நிகழ்ச்சிக்கு வெங்காலூர், மதுரை, திருச்சி, தஞ்சை, கோவை, சேலம், சென்னை முதலிய ஊர்களிலிருந்தும் நெடுநாளைய தென்மொழி அன்பர்களும், தமிழறிஞர்களும், ஆய்வாளர்களும் நாளும் வந்திருந்து சொற்பொழிவை ஆர்வமுடன் கேட்டுப் பயன் பெற்றனர். அன்பர்கள் பலர் பவானியிலேயே தனித்தும், குடும்பத்துடனும் தங்கு விடுதிகளில் தங்கியிருந்து உணவு, உறையுள் ஆகியவற்றுக்காகிய பெரும் பொருட் செலவையும் பொருட்படுத்தாது நிகழ்ச்சிகளில் தவறாமல் கலந்துகொண்டது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

பவானி, பாவேந்தர் இலக்கிய மன்றத்தார் அனைவரும் இத்தொடர் சொற்பொழிவுக்காகக் கடந்த நான்கைந்து மாதங்களாகவே பொது மக்களிடம் நன்கொடை தண்டியும், சுவரொட்டி, அறிக்கைகள் பரப்பியும், நிகழ்ச்சி சிறப்புற அமைய வேண்டி அரும்பாடு பட்டனர். குறிப்பாக மன்றத் தலைவர் திரு. பெ. முத்துச்சாமி, செயலர், புலவர் திரு. ப. ஆ. அரங்கநாதன், பொருளாளர் திரு. தென்மொழி நா. இளமாறன் ஆகிய மூவரும் இச்சொற்பொழிவு நிகழ்ச்சியின் பொருட்டு மிகவும் பாடுபட்டனர். கழற்கழக உறுப்பினர் பேரா. இரா. பாலசுப்பிரமணியம் க. மு.; கல். மு அவர்களின் பெருமுயற்சியால், பவானி கழற் கழகம் சொற்பொழிவு நிகழ்ந்த கழற் கழக அரங்கத்தை நிகழ்ச்சிக்கென இலவயமாகத் தந்துதவியது நன்றியுடன் குறிப்பிடத் தகுந்தது.

தொடர் சொற்பொழிவின் முதல் நாள் நிகழ்ச்சியின் தலைப்பு 'திருக்குறள் தோன்றுவதற்கான வரலாற்று அடிப்படையும், நூலமைப்பியல் விளக்கமும்' என்பது. இந் நிகழ்ச்சி திரு. வேலா. அரசமாணிக்கம் (குறளியம் ஆசிரியர்) அவர்களின் தலைமையில் நடந்தது. பாவேந்தர் இலக்கியப் பேரவைத் தலைவர் திரு. பெ. முத்துச்சாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். சொற்பொழிவு 2 மணி 45 நிமையம் நடந்தது. இறுதியில் மன்றச் செயலர் புலவர் திரு. ப. ஆ. அரங்கநாதன் அவர்கள் நன்றி கூறினார். இரவு 10 மணியளவில் நிகழ்ச்சி நிறைவுற்றது.

இரண்டாம் நாள் சொற்பொழிவு, 'திருக்குறள் கூறும் வாழ்வியல் கூறுகள்' என்னும் தலைப்பில் நிகழ்த்தப் பெற்றது. அரிமா பி. வி. திருமால் க.மு., கல் மு. (தலைமையாசிரியர், அரசு மேனிலைப்பள்ளி, குமார பாளையம்) அவர்கள் தலைமை தாங்கினார். புலவர். ப. ஆ. அரங்கநாதன் வரவேற்புரையாற்றினார். திரு. நா. இளமாறன் நன்றியுரையாற்றினார். இரவு 9-15 அளவில் நிகழ்ச்சி நிறைவுற்றது. சொற்பொழிவு நேரம் 2 மணி 15 நிமையம்.

மூன்றாம் நாள் நிகழ்ச்சிக்கு பவானி டால்பின்சு கழகத் தலைவர் திரு. கன்னையன் அறி.இ. தலைமையேற்றார். 'திருக்குறள் கூறும் அறம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு 2 மணி 22 நிமையம் நிகழ்ந்தது. திரு. பெ. முத்துச்சாமி வரவேற்புரை நிகழ்த்தினார். புலவர் திரு. ப. ஆ. அரங்கநாதன் நன்றியுரை கூறினார். இரவு 9-15 மணியளவில் நிகழ்ச்சி முடிவுற்றது.

நான்காம் நாள் நிகழ்ச்சியின் தலைப்பு 'திருக்குறள் கூறும் இல்லற அமைப்பு' என்பதாகும். தலைவர், பவானி மின்வாரியக் கோட்டப் பொறியாளர் திரு. கே. துரைசாமி, பொறி. இ. அவர்கள். வரவேற்புரையை நிகழ்த்தினார். திரு. கண்ணபிரான் நன்றியுரை கூறினார். சொற்பொழிவு 2 மணி 15 நிமையம் நிகழ்ந்தது. நிகழ்ச்சி இரவு 9-20 மணியளவில் நிறைவுற்றது.

ஐந்தாம் நாள் நிகழ்ச்சி மட்டும், கோயிலுக்கருகில் உள்ள வள்ளலார் மடத்தில் நிகழ்ந்தது. அந்த மடமும் நிகழ்ச்சிக்கென இலவயமாகத் தரப்பெற்றது. அன்று, தொடருரை 'திருக்குறள் கூறும் மெய்ப்பொருளியல்' என்னுந்தலைப்பில் 3 மணி 45 நிமையம் நிகழ்ந்தது. நிகழ்ச்சிக்கு புலவர் திரு. பொ கிகைச் செல்வன் (தமிழாசிரியர், அரசு ஆண்கள் மேனிலைப் பள்ளி, பவானி) அவர்கள் தலைமையேற்றார். புலவர் திரு ப ஆ. அரங்கநாதன் அவர்களும், திரு. பசுபதி அவர்களும், முறையே வரவேற்புரையும் நன்றியுரையும் ஆற்றினர்கள். நிகழ்ச்சி இரவு 11 மணியளவில் நிறைவுற்றது.

ஆறாம் நாள் சொற்பொழி, 'திருக்குறள் கூறும் அரசு' என்னுந்தலைப்பில் நிகழ்ந்தது பெரியார் மாவட்டத் திருக்குறள் பேரவைத் தலைவர் திரு. தி. அ. சண்முக சுந்தரம் தலைமை தாங்கினார். புலவர் திரு. ப. ஆ. அரங்கநாதன் வரவேற்புரையும் திரு. நல்லமுத்து நன்றியுரையும் ஆற்றினர்கள். உரை 3 மணி 05 நிமையம் நிகழ்ந்தது. நிகழ்ச்சி இரவு 10-30 மணியளவில் நிறைவுற்றது.

ஏழாம் நாள் நிகழ்ச்சிக்கு பேரா. திரு. இரா. பாலசுப்பிரமணியம் க. மு; கல். மு. (அரசினர் பயிற்சிக்கல்லூரி. குமாரபாளையம்) அவர்கள் தலைமையும் பேரா. திரு. கா. அரங்கசாமி க. மு., மெய். மு (கோபி கலைக்கல்லூரி) அவர்கள் முன்னிலையும் தாங்கினர்கள். புலவர் திரு. ப. ஆ. அரங்கநாதன் அவர்கள் வரவேற்புரையும், திரு. பெ. முத்துச்சாமி அவர்கள் நன்றியுரையும் ஆற்றினர்கள். உரை 3மணி நேரம் நிகழ்ந்து நிகழ்ச்சி 10.15 அளவில் நிறைவுற்றது.

எட்டாம் நாள் பாவலரேறு அவர்கள் 'திருக்குறள் கூறும் குமுகாயம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றினர்கள். இதற்கு கோபி வழக்கறிஞரும், திருக்குறள் ஆய்வாளரும் சிறந்த சிந்தனையாளரும் ஆகிய திரு. கு. ச. ஆனந்தன் வணி. இ; ச. இ. அவர்கள் தலைமையேற்றார்கள். முன்னிலையுரை பகுத்தறிவறிஞர் பேரா. வெ. கி. ஆசான் க மு. ச. இ அவர்களால் நிகழ்த்தப்பெற்றது. வரவேற்புரை புலவர் திரு ப. ஆ. அரங்கநாதன் அவர்களால் நிகழ்த்தப்பெற்றது. பொருளர் தென்மொழி நா. இளமாறன் அவர்கள் நன்றி கூறினர்கள். சொற்பொழிவு 3 மணி 45 நிமையம் நடந்தது. இரவு 11-30 மணிக்கு நிகழ்ச்சி முடிவுற்றது.

ஒன்பதாம் நாள் நிகழ்ச்சிக்கு ஈரோடு, வாசவி கல்லூரிப் பேராசிரியர் பா. ந. கந்தசாமி. க. மு. மெய். மு. அவர்கள் தலைமையேற்றார்கள். செயலர், புலவர் ப. ஆ. அரங்கநாதன் அவர்கள் வரவேற்புரையும், தென்மொழி நா. இளமாறன் அவர்கள் நன்றியுரையும் ஆற்றினர்கள். தலைப்பு 'திருக்குறள் கூறும் காமம்'. சிறப்புரை 3 மணி 40 நிமையம் நிகழ்த்தப்பெற்றது. இரவு 11 மணியளவில் நிகழ்ச்சி முடிவுற்றது.

இறுதிநாள் நிகழ்ச்சியாகிய பத்தாம் நாள் நிகழ்ச்சி 'திருக்குறள் கூறும் சமயம்' என்பதுபற்றி நிகழ்த்தப் பெற்றது. நிகழ்ச்சிக்கு, பவானி அரசு மகளிர் மேனிலைப்பள்ளித் தமிழாசிரியர் புலவர் சி. முத்துச்சாமி க. மு. அவர்கள் தலைமையேற்றார். பேரவைத்தலைவர் திரு பெ முத்துச்சாமி வரவேற்புரையாற்றினார். 4 மணி 40 சொற்பொழிவு நிமையம் நிகழ்த்தப்பெற்றது இதுவே அனைத்திலும் நீண்ட சொற்பொழிவாக அமைந்தது. பாவலரேறு அவர்கள் நிகழ்ச்சிக்கு முத்தாய்ப்பு வைக்கும் வகையில், 'இது போலும் சொற்பொழிவுகள் பெரும் பயன் நோக்கிச் செயயப் பெறுவதென்றும், இதைப்பயன்படுத்திக் கொள்பவர்கள் பெரும் அளவினராக இருத்தல் வேண்டும் என்பது பற்றியும், 'திருக்குறள் மெய்பபொருளுரை' என்னும் நூல் தபமால விரைவில் எழுதப்பெறும் என்றும், அதுவரை இதுபோலும் தொடர் சொற்பொழிவுகள் இனிநடைபெறா என்றும், இடையறாத் தென்மொழியன்பரும், தென்மொழிப் புரப்பாளரும், உண்மைத்தமிழ் தமிழினப் பற்றாளரும், இச்சொற்பொழிவு நடைபெறுவதற்கு முகாமைக் கரணியரும் ஆகிய தென்மொழி நா. இளமாறன் அவர்களால் நீண்ட நெடுநாளாகக் கேட்டுக் கொண்டதன் பேரிலேயே இச்சொற்பொழிவு நிகழ்கிறது என்றும், இனி, இதுவே இவ்வகையில் முதலும் முடிவுமான சொற்பொழிவாக இருக்கும் என்றும் கூறி, இச்சொற்பொழிவு நிகழ்வதற்குப் பாடு பட்ட பவானி, பாவேந்தர் இலக்கியப் பேரவையினர் அனைவர்க்கும், சிறப்பாக அதன் தலைவர் திரு பெ. முத்துச்சாமி, செயலர், புலவர் ப. ஆ. அரங்கநாதன். பொருளர் தென்மொழி நா. இளமாறன் ஆகியோர்க்கும் இச்சொற்பொழிவைத் தொடர்ந்து வந்து கேட்டுப் பயன் பெற்ற அனைவர்க்கும் தம் நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் கூறி நிறைவுரை செய்தார்.

அதன்பின் சொற்பொழிவை நாளும் வந்திருந்து கேட்டுப் பயனடைந்தவர்களாக பவானி, கீழ்மேட்டூர் நீர் மின்திட்ட நடுவண் அலுவலகத்தைச் சார்ந்த, கணக்காளர் திரு. வி. பி. இராமச்சந்திரன் அவர்களும், குமார பாளையம் வணிகர் திரு. வே. சனார்த்தனம் அவர்களும், தொடர் சொற்பொழிவின் சிறப்புகள் பற்றியும், பயன் பற்றியும், தேவை குறித்தும் தங்கள் மனவுணர்வுகளை எடுத்துக்கூறிப் பாவலரேறு அவர்களை மிகவும் பாராட்டி வியப்புத் தெரிவித்தனர்.

முடிவில், பேரவைச் செயலர் புலவர். ப. ஆ. அரங்கநாதன் அனைவர்க்கும் இறுதி நன்றியுரை கூறினார்.

விழா முடிவில் பாவலரேறு அவர்களுக்குக் காணிக்கையாக உருபா 1300 பொருளர் திரு. தென்மொழி நா. இளமாறன் அவர்களால் கொடுக்கப் பெற்றது. அத்துடன் அவர் தமிழ்நிலத்திற்கு ஐந்தாண்டுகளுக்குரிய உறுப்பாண்மையையும் வழங்கினார். இவற்றோடு அவர் மூன்றாவது ஆண் குழந்தைக்குப் பாவலரேறு அவர்கள் 'குரலோவியன்" என்று பெயர் சூட்டியதற்காகத் தமிழ்நிலத்திற்கு அன்பளிப்பாக உருபா 25ஐ நன்கொடையாகத் தந்தார்.

இறுதிநாள் நண்பகல் விருந்து, பாவேந்தர் இலக்கியப் பேரவையின் சார்பில், சொற்பொழிவுக்கு வந்திருந்த வெளியூர் அன்பர்களுக்கும் பாவலரேறு அவர்களுக்கும் சிறப்பாக வழங்கப் பெற்றது, குறிப்பிடத்தக்கது.

அத்துடன் வெளியூர் அன்பர்கள் ஒவ்வொரு நாள் இரவும் தங்கியிருப்பதற்குக் கழற் கழக அரங்கத்தை அக்கழகம் அன்புடன் தந்துதவியது பெரும் நன்றியுடன் குறிக்கத்தக்கது.

நிகழ்ச்சியின் ஒவ்வொரு நாள் தொடக்கத்திலும், தமிழ்த் தாய் வாழ்த்துப்

(7 ஆம் பக்கம் பார்க்க)

உ. த. மு. க. உறவு மடல்:

'மூட்டா'வா? தமிழில் என்ன?

'மீள் பார்வை செய்யுங்கள்', என்று தமிழ் நாட்டில் உள்ள இயக்கங்களை வேண்டுகிறோம். தங்கள் பெயர்களைத் தமிழில் வைத்துக் கொண்டால் மட்டும் போதாது. தமிழ் நாட்டிலிருந்து வரும் ஆங்கில ஏடுகள் தங்களின் செய்திச் சுருக்கம் கருதி இயக்கப் பெயர்களைச் சுருக்கி வெளியிடுவதுண்டு. அவை ஆங்கில ஆக்கம் செய்து சுருக்குவதுண்டு. அவற்றையே, தமிழில் எழுதும் போது 'தமிழ் ஆக்கம்' சிதையாமல் பேணுதல் வேண்டும்.

குறிப்பாக 'மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆசிரியர் மன்றம்' (Madurai Kamaraj University Teacher's Association) - Muta - 'மூட்டா' என்று வழங்கப்படுகிறது. இதனைச் சுருக்கி வழங்கும் போது தமிழில் எப்படிச் சொல்லலாம் என்று மீள. எண்ணிப் பார்க்க வேண்டும்! வேண்டுகிறோம்!

தமிழில் சிந்திக்கச் சுருக்கப் பெயர் கிட்டாமல் போகாது. எனவே அனைத்து இயக்கங்களும் பெயராட்சியும் தமிழில் சுருங்கிய வடிவிலும் உருவாக்கம் பெற உதவக் கேட்டுக் கொள்கிறோம்.

-பறம்பை அறிவன்

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி 1 | 23-1-83—இதழ் எண்: 10 | பகுதி 11-12

நம் முயற்சிகளும் போராட்டங்களும் தமிழின முன்னேற்றத்திற்கு அடிப்படையானவை!

அன்பர்கள் பலரும் அவ்வப்பொழுது நமக்குக் கடிதங்கள் வாயிலாகவும், நேரிலும் சில கருத்துகளை, இயக்க நலம் கருதிப் பலவாறு கூறி வருகின்றனர். அவை தமிழகத்தின் நடைமுறை அரசியலிலும் சிக்கல்களிலும் நாம் ஈடுபட்டுப் போராட்டங்களை நடத்த வேண்டும் என்பது போன்றவையே!

நம் இயக்கம் அடிப்படையான ஒரு குமுகாய, அரசியல் சீர்திருத்த இயக்கம். இஃது, அவ்வப்பொழுது ஏற்படும் மேலோட்டமான சிக்கல்களில் அதிகக் கவனம் செலுத்திக் கொண்டிருக்கும் முயற்சிகளில் ஈடுபடுவது, தேவையற்றதும், இயக்கத்தை வலுவிழக்கச் செய்வதுமான ஒரு நடவடிக்கையாகப் போய்விடும். நாட்டில் நடைபெறுகின்ற அன்றாடச் செய்திகள் நடைமுறை அரசியலுக்கும், அதில் ஈடுபடுகின்ற கட்சிகளுக்கும் பொருந்தி வரலாம். அவற்றுக்கு அவை தேவை. அல்லாவிடில் அக்கட்சிகள் உயிர் பிழைப்பது அரிது. அக்கட்சிகளும், அவற்றின் தலைவர்களும், தாமும் தம் கட்சிகளும் இருக்கின்றோம் என்று மக்களிடம் அடையாளங் காட்டிக் கொள்வதற்காகவே அன்றாடச் செய்திகளின் தொடர்பாக, அறிக்கைகளையும் சிறு சிறு போராட்டங்களையும் அறிவித்துக் கொண்டிருக்க வேண்டிய கட்டாயங்கள் உண்டு. அவற்றுக்காக நாமும் அவ்வாறு செய்து கொண்டிருக்க வேண்டிய தேவை இல்லை.

ஒரு முள் மரத்தை ஒழிக்க, அதன் கிளைகளை அவ்வப்பொழுது வெட்டிவிட்டுக் கொண்டிருப்பதும், அதன் இலை, தழைகளை நெருப்பிலிட்டுக் கருக்கிக் கொண்டிருப்பதுமான செயல்களையே பிற கட்சிகளும் கழகங்களும் அவற்றின் தலைவர்களும் செய்து வருகின்றனர். நாம் அம் முள் மரத்தை வேருடன் வெட்டிச் சாய்த்து, அதனை அறவே வளர விடாமல் அழிக்கின்ற அடிப்படையான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம் என்பதை நம் இயக்கத்தவர்கள், வேறுபடுத்தி விளங்கிக்கொள்ள வேண்டும். அடிப்படை முயற்சிகளைச் செய்பவர்களுக்கு நம்பிக்கையும், ஊக்கமும், விடா முயற்சியும், துணிவும், சிறு சிறு பயன்களில் நாட்டமின்மையும், அவ்வப்பொழுது வருகின்ற ஊதியங்களுக்கு நப்பாசை கொள்ளாமையும், ஈகமும், ஒரு பெரும் போராட்ட மனப்பான்மையும் மிகமிகத் தேவை. அவற்றுக்காகக் காலங் கருதிக் காத்திருப்பதும், இடம் கருதிப் பார்த்திருப்பதும் மன ஊக்கமின்மை ஆகாது.

'தென்மொழி'யின் கடந்தகால வரலாற்றை ஊன்றிப் பார்ப்பவர்களுக்கு ஓர் உண்மை விளங்காமற் போகாது. அன்று நாம் தென்மொழி வழியாக அறிமுகப்படுத்திய தூய தமிழ்ச்சொற்கள், இன்று எந்த அளவில் மக்களின், அரசின் நடைமுறைச் சொற்களாகக் கடைப்பிடிக்கப் பெற்று வழக்கிற்கு வந்திருக்கின்றன என்னும் உண்மையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். 'தென்மொழி' இதழும், கடந்த இருபத்தைந்தாண்டுக் காலத் தொடர்ந்த முயற்சிகளும் இல்லாமற் போயிருக்குமானால், தமிழ் இன்றைக்கு எவ்வளவு மறைக்கவும் அழிக்கவும் பட்டுப் போயிருக்கும் என்பதை, இருபத்தைந்தாண்டுக்கு மேற்பட்ட நடுத்தர அகவையினரும், பெரியோரும் கட்டாயம் உணரமுடியும். இருபத்தைந்தாண்டுக்கும் உட்பட்ட இளைஞர்கள் அதை உணரமுடியாது.

அது போலவே, 'தமிழ் நிலம்' இதழின் வாயிலாகவும், உ. த. மு. க. இயக்கத்தின் வழியாகவும், நாம் இன்று தொடங்கியிருக்கும் முயற்சிகளின் வெற்றியும், மலர்ச்சியும் படிப்படியாகவே நாட்டுக்கு நலன்களைத் தரமுடியும். தொடர்ந்து உண்ண, உடலுக்கு நலமும் ஊட்டமும் தருகின்ற உயிர்ச்சார மருந்து போன்றது நம் முயற்சி! அவ்வப்பொழுது அயர்வைப் போக்குகின்ற சாரமாத்திரைகளைப் போன்றன பிற கட்சியினரின் முயற்சிகள். காலப் போக்கில் பயன்தரத் தக்க. அடிப்படை விளைவுகளுக்கு விதைகள் போன்ற நம் முயற்சிகளை எவரும் குறைத்து மதிப்பிடவோ, அதனால் மனச்சோர்வும் அவநம்பிக்கையும் கொள்ளவோ வேண்டா.

மேலும், அவ்வப்பொழுது நம்மை எதிர்கொள்ளும் சிறு சிறு இடைக்காலச் சிக்கல்களில் நாம் தலையிட்டுக் கொண்டிருப்பது நம்மை வலுக்குறைப்புக்கும் பொருளிழப்புக்குமே ஆளாக்கச் செய்துவிடும். அவற்றால் நாம் பெறவிருக்கும் பயனும் மிகக்குறைவானதாகவும் நம்கொள்கை நிறைவுக்குப் போதுமானதில்லாததாகவும், போய்விடும். நம் முயற்சிகள் மிகவும் ஆழமானவை; அகலமானவை; காலக்கால் மட்டுமே மதிப்பிடக்கூடியவை. வெறும் மண்ணைத் தோண்டிப் போட்டுக் கொண்டிருப்பவை அல்ல. அவை, வைரச் சுரங்கத்தை வெட்டுவதைப் போன்ற கடினமானவையும் முயற்சிமிக்கவையும் ஆகும். அவை, யானை வேட்டைக்குப் புறப்பட்ட நாம், எதிர்வரும் பூனைகளையும், முயல்களையும் கண்டு கிளர்ச்சியடையத் தேவையில்லை. நம் முயற்சிகளில் தோற்றுப்போவது பற்றியும் நாம் கவலை கொள்ளத் தேவையில்லை. ஆனால், செய்யப் பெற்றாக வேண்டும். கட்டாயம் அவற்றின் விளைவுகள் இன்றில்லையானாலும் நாளை நடந்தே தீரும்.

'கான முயலெய்த அம்பினில் யானை பிழைக்கவேல் ஏந்தல் இனிது'! என்னும் குறள்மொழியை நாம் நினைவு கூர்தல் வேண்டும். மேலும், 'பெருமை உடையவர் ஆற்றுவார், ஆற்றின் அருமை உடைய செயல்'. 'ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின், நீள்வினையால் நீளும் குடி' என்னும் குறளுரைகளையும் நாம் நன்கு எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

இனி, இன்னும் ஒன்றையும் நாம் எண்ணிப் பாராமல் விட்டுவிடக்கூடாது. நம் இயக்கம் இப்பொழுது தான் முளைத்துக் கிளைத்து வருகிறது. இன்னும் வலுப்பெற்று, விரிவடையவில்லை. இக்கால் வெறும் மனக்கிளர்ச்சியால் நாம் ஒரு போராட்டம் தொடங்கினால், நம்முடன் போராட்டத்தில் தவறாமல் பங்குபெறுபவர் எத்தனைப் பேர்? அவரவர் நெஞ்சைத் தொட்டுப் பார்த்துச் சொல்ல வேண்டும்! நமக்குப் பிறகட்சிகளும் கழகங்களும் நடத்தும் அல்லது அறிவிக்கும் போராட்டங்களும் முயற்சிகளும் வேறு எவரையும் விட நன்கு தெரியும். வெறும் விளம்பரத்திற்காகவும், பணத்திற்காகவும் அவை நடத்தும் போராட்டங்களின் பின்னணி எதுவென்று எல்லார்க்கும் எளிதில் விளங்கிவிடாது. அதுபோலும் போராட்டங்களால் எந்த அடிப்படைப் பயனோ மாற்றமோ கட்டாயம் விளைந்துவிடப் போவதில்லை. இதுவரை விளைந்ததும் இல்லை.

நீண்ட நெடுங்காலமாக அடிமையுற்று, அகப்புலன் கெட்டு, மதிகலங்கிக் கிடக்கும் தமிழினத்தை மீட்பதும் ஈடேற்றுவதும் அத்துணை எளிய செயலன்று. கடலடியில் மூழ்கிக்கிடக்கும், செல்வம் கனக்கும் ஒரு கப்பலை, வெறும் கைதூக்காகத் தூக்கிக் கரைக்குக்கொண்டுவரும் ஒரு முயற்சியாகும் இது. இம்முயற்சி வெற்றி பெறுமா பெறாதா என்பதுபற்றி நமக்குக் கவலையில்லை. இம்முயற்சி செய்யப் பெற்றாக வேண்டும். ஒரு கை ஒரு கோடிக் கைகளாக மாறும் பொழுது, கப்பல் அசையவே செய்யும். அசைந்தே ஆக வேண்டும்.

கிடைத்த விதையை எறிந்துவிட நான் அணியமாயில்லை. எங்காவது, ஏதாவது ஒரு கையகல நிலத்தில் நட்டுவிடவே துடிக்கிறேன்; முயல்கிறேன். அது விளைவதும் பெருகுவதும் காலத்திற்கும் ஆழ்ந்த முயற்சிக்கும் விடப்பெற்றுள்ளது. எனவே, காளான்களை விளைவிப்பவர்களைப் பற்றியும் அவற்றை எண்ணிக் கணக்குப் பார்த்துக் கொண்டிருப்பவர்களைப் பற்றியும் நான் கவலைப்படத் தேவையில்லை. அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்; பெருமை முயற்சி தரும்!

ஆடுகோ(டு) ஆகி, அதரிடை நின்றதூஉம்
காழ்கொண்ட கண்ணே களிறணைக்கும் கந்தாகும்!
வாழ்தலும் அன்ன தகைத்தே, ஒருவன்தான்
தாழ்வின்றித் தன்னைச் செயின் —நாலடியார்

(பொருள்: துவளுகின்ற சிறு கொம்பாகி, வழியிலே நின்ற சிறு கொம்பும் வயிரமுற்று வளர்ந்த பொழுதில், யானையைக் கட்டுதற்கும் உரிய மரமாகி விடும். ஒருவன், தன்னைத் தாழ்விலாத முயற்சிகளில் ஈடுபடுத்திக் கொள்வானாயின், அவன் வாழ்விலும் அப்படிப் போன்ற விளைவு கிடைக்கும்)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இயங்க முடியாதபடி, அவர்கள் ஆசிரமத்துக்காரர்களால் வளைத்துக் கொள்ளப்படுகிறார்கள். ஆசிரம உறுப்பினர்களாக இருப்பவர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் பெரும் பெரும் பட்டங்கள் பெற்ற பேராசிரியர்கள், பொறியாளர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், கலைஞர்கள், தொழில் திறவோர்கள், எழுத்தாளர்கள், புலவர்கள் ஆவார்கள்.

அங்கு ஆண்கள், பெண்களுக்கிடையில் வேறுபாடுகள் இல்லை. கட்டுப்பாடுகளும் ஒழுக்கமும் வெளிக்குத் தெரிவதுபோல், உள்ளுக்குள் இல்லை. கருக்கலைப்புகள், திருட்டுக் குழந்தைகள் பெறுதல், கற்பழிப்பு, குடி, கொலைகள் முதலிய அனைத்து நிகழ்ச்சிகளும் அங்கு நடைபெற்று வருவனவாகவே பொதுமக்களால் பேசிக் கொள்ளப் பெறுகின்றன. ஆனால் எந்த ஒரு குற்றமும் ஆசிரமச்சுவர்களைத் தாண்டி வெளியே வந்ததில்லை.

ஆசிரமத்தை உருவாக்கி நிலைநாட்டியவர் அரவிந்தர் ஆவார். அவர் உயிரோடிருக்கையில் பல நாட்டுப் பொதுமக்களும், பணக்காரர்களும், அறிஞர்களும், கலைஞர்களும் அங்கு வந்து போய்க் கொண்டே இருந்தார்கள். அவ்வாறு பிரான்சிலிருந்து வந்த திருமணமாகிய ஓர் அம்மையார், பின்னர் கணவருடன் செல்லாமல், அரவிந்தருடனேயே தங்கிவிட்டதாகவும், அவரே அரவிந்தருக்குப் பின்னர், ஆசிரமத்துக்காரர்களுக்கும் அவருடைய சொத்துகளுக்கும் உரிமையாளராகி, **அன்னை** (Mother) என்று மதிக்கப் பெற்றதாகவும் சொல்லப் பெறுகின்றன. அன்னையும் இப்பொழுது இல்லை. இக்கால் ஆசிரமம் ஒரு குழுவால் நடத்தப்பெறுகிறது. அங்கு உள்ள பல நடைமுறைகள், செயற்பாடுகள், உள்நாட்டு, வெளிநாட்டுத் தொடர்புகள், பெரும்பாலும் வெளியில் வருவதில்லை. தெரியவரும் செய்திகள் ஆயிரத்தில் ஒரு பங்கே ஆகும். புதுச்சேரியில் எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும், ஆட்சியாளர்கள், அதிகாரிகள், பொதுமக்கள் தலைவர்கள் முதலிய அனைவரையும் கைக்குள்ளே போட்டுக்கொண்டு தங்களுக்காக அவர்களை ஆட வைக்கும்படியான அத்தனை ஆற்றல்களும் அங்கு உண்டு. ஒரு முறை, அங்குள்ள அமைப்புகளையும், கவர்ச்சிகளையும், அழகும் வளப்பமும் வாய்ந்த பெண்கள் கூட்டத்தையும் அவர்கள் பழகும் முறைகளையும் உரிமைகளையும் போய்க் காணவும் ஈடுபடவும் வாய்ப்புப் பெற்றவர் எவரானாலும் அவர் ஆசிரமத்துக்கு அடிமையாகவோ, ஆதரவாளராகவோ போய்விடுவதில் வியப்பே இல்லை.

இத்தகைய அருமை பெருமைகள் வாய்ந்த ஆசிரமத்தின் தோற்றுநர், (அவர்கள் கருதுவது மாந்தர் தெய்வம்- Father supreme, mother supreme) அரவிந்தர், சமசுக்கிருதமொழி உலகமொழியாக வேண்டும் என்று ஆசைப்பட்டு, அதற்கென பெருமுயற்சி செய்ய வேண்டும் என்று விருப்ப ஆவணம் ஒன்று செய்துள்ளாராம். அதன்படி அரவிந்த ஆசிரமம், சமசுக்கிருதத்தை உலகமொழியாக (International Langvage) ஆக்குவதற்தென்று 800 கோடி உருபாவை ஒதுக்கியுள்ளதாம். அத்தொகையும் திட்டமும் ஆர்.எசு.எசு. (R.R.S.) அமைப்பிடம் ஒப்படைக்கப் பெற்றுள்ளதாம். அந்த நிறுவனம் அவற்றை 'விசுவஇந்து பரீச'த்திடம் ஒப்படைத்துச் செயற்படுத்தக் கட்டளையிட்டுள்ளதாம்.

அத்திட்டம் பலவகையிலும், பல கட்டங்களாகச் செயல்பட இருப்பதாகத் தெரிய வருகிறது. இந்தத் தொகையுடன் அவ்வப்பொழுது, வடநாட்டு முதலாளிகள் பலரிடமும் பல கோடி உருபாக்கள் திரட்டப்பட்டு இருக்கின்றன என்று தெரிகிறது. கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 4 கோடியே 70 இலக்கம் உருபா திரட்டியிருக்கிறார்களாம். இத்திட்டத்துடன் இந்து மதத்தை வலுப்படுத்துவதும் அயல் மதங்களாகிய இசுலாம், கிறித்துவம் ஆகிய இரண்டு மதங்களையும் வேரறுப்பதுமே அவர்களின் கொள்கைகளாக வரையறுக்கப் பெற்றிருப்பதாகத் தெரிய வருகிறது. பிறசெய்திகளை அடுத்த இதழில் பார்ப்போம்!

(தொடரும்)

இந்தியப் பெருநாட்டின் அடிப்படையான மரபுகள் எவை?

- கோ. மு. பெருமாள்

மொகஞ்சாதரோ காலத்திலிருந்து இன்று வரை இந்த இந்தியத் துணைக் கண்டத்தில் சமற்கிருத மரபிற்கும் சமற்கிருதமல்லாத பிற மரபுகளுக்கும் போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கிறது. சமற்கிருதம் தான **இந்தியா முழுவதிற்கும் நாகரீகம் கற்றுக்கொடுத்தது என்பதும், சமற்கிருதம் தான் இந்தியா முழுவதிற்குமான கலை, பண்பாட்டு, அரசியல், மதத் துறைகளுக்கு இணைப்பு மொழியாக விளங்கியது என்பதும் ஓர் அப்பட்டமான கடைந்தெடுத்த முழுப் பொய் என்பது இன்று தெளிவாயிருக்கிறது.** இதுநாள் வரை எதை எதையெல்லாம் சமற்கிருதச்சார்பு என்று எண்ணி வந்தோமோ, அவற்றிற்கெல்லாம் மூலம் சமற்கிருதமன்று என்பதையும், ஏற்கனவே இந்தப் பரந்த துணைக் கண்டத்தில் நிலவி வந்த பழம்பெரு பண்பாடுகளின் கூறுகள் தாம் அவை என்பதையும் இன்றைய ஆராய்ச்சியாளர்களின் முடிவுகளிலிருந்து தேற முடிகிறது. 'சமற்கிருதம்' என்ற சொல்லே, 'திருத்தமாய்ச் செய்யப்பட்டது' என்னும் பொருளைக் கொடுப்பதால், சமற்கிருத மொழி பிறக்கு முன்பே வேறு பல மொழிகள் இந்நாட்டில் நிலவி வந்தன என்பது அறியப்படுகின்றதன்றோ! தமிழும், திரிந்த தமிழாகிய சில மொழிகளும் மற்றும் பிராகிருதம், பாலி ஆகிய மொழிகளும் சமற்கிருதம் வளர்ச்சி அடையு முன்பே இந்தியத் துணைக் கண்டத்தில் சீரும் சிறப்புமாக இலங்கி வந்தன என்பதற்கான வரலாற்று அடிப்படைகள் மெல்ல மெல்ல துலங்கி வருகின்றன. மொழிப் பேரறிஞர் பாவாணரின் முடிவுப்படி, சமற்கிருதம் என்பது, ஏற்கனவே இந்தியப் பெரு நாட்டிலும் இந்தியாவையொட்டிய பிறநாடுகளிலும் இலக்கணங்களையும், சொற்களையும், கருத்துகளையும் தனதாக்கிக் கொண்டு ஆக்கப்பட்ட செயற்கையான கலப்பட மொழி என்பதையும், மேலும் வளர்த்த பிற மொழிகளையே சீர்குலைத்து, அவற்றின் மேல் ஆளுமை செலுத்த முற்பட்டு வந்திருக்கிறது எனவும் உணர்ந்து கொண்டோம்.

சுமேரிய எழுத்து முறைகளை ஆராய்ந்த பெருந்தமிழறிஞரான திரு. உலோகநாத முத்தரையன் என்பார், சுமேரிய மொழி முதற்சங்க காலத்துத் தமிழ்தான் என்பதை நிறுவி, மேலும் அதன் மூலம், இதுவரை சமற்கிருதச் சொற்கள் எனக் கருதப்பட்ட நூற்றுக்கணக்கான நுண் சொற்கள் அனைத்தும் தமிழே எனத் தெரிய வருவதாகவும் எடுத்துரைத்திருக்கின்றார். ஆனால் ஆரிய மேல் வருண அணியினர் திட்டமிட்டுப் பிறமொழிகளையும் இனப் பண்பாடுகளையும் தாழ்த்திச் சமற்கிருதத்திற்கு முதன்மை கொடுத்து அதை ஆளுமை செலுத்த வழி வகுத்துக் கொடுத்திருக்கின்றனர். நாகரிகப்படுத்தல், தரப்படுத்துதல் என்ற போலிப் புனைவின் மூலம் சமற்கிருதமே யாவற்றிற்கும் மூலமானதும் மேன்மையானதுமாம் என்னும் மாயத் தோற்றத்தைக் காட்டினார்கள் அவர்கள். இந்நூற்றாண்டு வரை அம்மாயத் தோற்றத்தை மாயாவுண்மை என்று நம்பி மயங்கி நின்றனர் அறிஞர்களனைவரும். இந்நூற்றாண்டு அறிஞர்களின் ஆராய்ச்சிகள் சிறப்பாக இந்நூற்றாண்டுப் பிற்பகுதியில் விளைந்த இந்தியவியல், தமிழியல் ஆராய்ச்சிகள் அம்மாயத் தோற்றத்தை அழிவுறச் செய்து, சமற்கிருதத்தின் வெளிறிய வடிவத்தைப் புலப்படுத்தி வருகின்றன.

இந்தியப் பேரரசும் ஆரியமேல் வருணச் சார்பானதால், சமற்கிருதத்திற்கே முதன்மை கொடுத்தும் சமற்கிருதச் சார்பில்லாத பிறவின மொழி, பண்பாட்டுக்கூறுகளுக்கு ஒரு சிறிதும் மதிப்பளித்துப் போற்றாமலும் ஓரவஞ்சனையுடன் செயல்படுகிறது. இந்தி மொழியினைச் சமற்கிருத மயமாக்க முனைவதின் மூலமே இந்திய அரசினுடைய சமற்கிருதச் சார்பான இந்நடுநிலைப் பிறழ்ச்சி தெற்றென விளங்கும். உண்மையில் இந்திமொழி என்பதும பல இன, பண்பாட்டுக் கலவையால் விளைந்த மொழி. இந்துத்தானி என்ற அந்தக் கலப்பட மொழியைத்தான் பொது மொழியாக்கக் கோரினார் காந்தியடிகளும். தென்னாட்டார்க்கு இந்துத்தானி முற்றிலும் வேற்று மொழியானாலும், பன்னூற்றாண்டுக் கால மொகலாய ஆட்சியின் பயனாக ஒரு கலப்பட மொழியாக உருவாகி, ஒருவகையில் வடபுலத்து இணைப்பு மொழியாக வளர்ந்தது. அம்மொழியிலுள்ள பிறவினக் கூறுகளையெல்லாம் நீக்கிவிட்டு, அதிலுள்ள வடமொழிச் சார்பான கூறுகளை மட்டும் தக்கவைத்துக்கொண்டும் மேலும் ஆட்சித் துறை, கல்வி, கலைத்துறைகளில் அதனைக் கையாளுமிடத்து முழுக்க முழுக்க சமற்கிருதமாக்கியும், அம்மொழியை வடஇந்தியப் பெருமக்களுக்குப் புலப்படாதவாறும் புரிபடாதவாறும் ஆக்கி வருகின்றனர். அங்கும் ஆரிய மேல் வருணத்தாரின் கரவான சூழ்ச்சியே ஓங்கியுள்ளது.

'தேவப்பிய', 'பியதாச' என்னும் பிராகிருத மூல வடிவங்கள்தாம் பேரரசன் அசோகனுக்கு வழங்கி வந்த பட்டப் பெயர்கள். அவருடைய கல்வெட்டுகளிலும் இச்சொற்கள் தாம் பொறிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்று மாணவர்களுக்கு அவற்றைக் கற்றுக்கொடுக்கும் பொழுது, அவற்றின் சமற்கிருதமாக்கப்பட்ட 'தேவப்பிரிய' 'பிரியதாச' என்னும் வடிவங்கள் தாம் கையாளப் பெறுகின்றன. இஃது இந்தியப் பண்பாட்டுப் பழமைக்கு இழைக்கப்படும் இரண்டகமான செயலன்றோ! சமற்கிருதம் வளர்ச்சி அடையுமுன்பே வளர்ச்சியடைந்த பிராகிருத் மொழிக்கு ஏன் இந்தப புறக்கணிப்பு? பிராகிருத மூலங்கட்கு ஒப்பு அளித்தால், சமற்கிருதத்திற்கு தாழ்வு வருமன்றோ—அவ்வாறு சமற்கிருதம் தன் ஆளுமையை இழக்க ஒருப்படுவார்களோ, வருணமேல் மட்டத்தார்!

உண்மையில் இந்நாட்டில் வல்லாண்மை மனப்பான்மைக்கும், அதன்வழி பிற்போக்குத்தனத்திற்கும் ஆணிவேர்களும் சல்லிவேர்களுமாய் விளங்குபவர்களே இச்சமற்கிருதச் சார்பான மேல்வருண மாந்தர்கள் தாம்: இவர்களின் முயற்சிகளை முறியடித்தால்தான் இந்நாட்டில் முன்னேற்றமான மனப்பான்மையை மக்களின் உள்ளங்களில் எழச் செய்ய இயலும். அல்லெனில் **'பொது இந்தியப்பண்பாடு'** என்னும் பெயரால் சமற்கிருதப் பண்பாடாகிய போலியான ஒரு மாயத் தொடரி சங்கிலியால்)யால் பிணைத்து, இந்நாட்டு முக்காலே மூன்று வீசம் மக்களையும் தங்களுக்கு அடிமைகளாகவே ஆக்கிவிடுவார்கள் இவர்கள்.

இந்த வல்லாண்மைக் கூட்டத்தினர்க்கு எதிர்ப்பும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இருந்து வந்தாலும், அவ்வெதிர்ப்பினையெல்லாம அவர்கள் நால்வகைப் போர் உத்திகளைக் கையாண்டும் வேறு பல சூழ்ச்சித் திறன்களாலும் முறியடித்து வந்திருக்கின்றனர். புத்தமும் சமணமும் இவ்வாளுமையை எதிர்த்தே இந்நாட்டில் எழுந்தன. அம்மதங்களும் சமற்கிருதச் சார்பு வல்லாண்மையால் விழுங்கப்பட்டு நிலை இழந்தன. இடைக் காலத்தில் எழுந்த ஒரு சில எதிர்ப்புகளும் வலிகுன்றி வீழ்ச்சியடைந்தன. ஆனாலும் மீண்டும் இந்த ஆளுமை ஆற்றல்களுக்கு எதிர்ப்பு இந்நாட்டில் இந்நூற்றாண்டில் எழுந்துள்ளது—மட்டுமன்றி வலுவடைந்தும் வருகின்றன. அவ்வாளுமை எதிர்ப்புச் சுட்ரை மீண்டும் இவ்விந்தியப் பெருநிலத்தில் ஏற்றி வைத்தவர்கள் இருபெரும் பெரியார்களாவர். அவர்கள் தாம் பெரியார் இராமசாமியும், அண்ணல் அம்பேத்காருமாகும். பல தரப்பட்ட துறைகளில் இவ்விருபெரும் தலைவர்களும் எடுத்துச் சொல்லிய கருத்துகளெல்லாம் சமற்கிருத ஆளுமை ஆற்றலின் அடிப்படையைத் தகர்க்கும் சம்மட்டி அடிகளாவே விளங்கின. இனி இந்த இந்தியப் பெருநாட்டின் பொருளியல், அரசியல், பண்பாட்டியல் இயக்கங்கள் இவ்விரு பெரும் தலைவர்களின் கோட்பாடுகளை நடுவாகக் கொண்டே சுழலும் என்பது திண்ணம்.

இந்தியாவின் வடக்கே...

இந்தியாவின் வடக்கே அமைந்துள்ள நாகலாந்து, மணிப்பூர், மிசோரம் ஆகிய எல்லைப்புற மாநிலங்களில் வாழும் பழங்குடி மக்கள் தங்களை இந்தியர்கள் என்று சொல்லிக்கொள்ளவே மறுக்கின்றனர். இந்திய நாட்டிலிருந்தும் இந்திய அரசியலமைப்பிலிருந்தும் விடுதலை வேண்டும் என்று கேட்டு நீண்டநாட்களாக இந்தியப் படைகளை எதிர்த்துப் போராடி வருகிறார்கள் இதற்கு இவர்கள் கூறும் காரணியம் தாங்கள் பொருளியலில்பின் தங்கியிருப்பதாகவும், மற்ற மாநிலத்தவர்களால் கடுமையாகச் சுரண்டப்படுவதாகவும் இதிலிருந்து மீள்வதற்கே விடுதலை கேட்டுப் போராடுவதாகவும் கூறுகின்றனர். இவர்களில் படித்த இளைஞர்கள் படையினரின் கெடுபிடி தாங்க முடியாமல், எல்லையை அடுத்துள்ள சீனாவில் தஞ்சம் புகுந்து சீனர்களால் கொரில்லாப் போர்ப் பயிற்சி பெற்று மீண்டும் தாயகம் திரும்பி ஒரு வலுவுள்ள விடுதலைப் படையை அமைத்துக் கொண்டு போராடுகின்றன ராம் இவர்களை அடக்கி ஒடுக்க நடுவண் அரசு 7 பட்டாளச் சீக்கியப் படைகளைப்பகுதிக்கு அனுப்பியிருக்கின்றனர். இவர்களுக்கும் கொரில்லாப் படைக்கும் உயிர்ப்போராட்டம் நடந்து கொண்டுள்ளது. பெண்கள் படைத்துறையினரால் கற்பழிக்கப்படுவதாகவும், இளைஞர்கள் சுட்டுத் தள்ளப்படுவதாகவும் செய்திகள் கூறுகின்றன. ஏதுமறியாத பொது மக்கள் இருப்பதா? இறப்பதா? என்ற கேள்விக்கு விடை தேடுகின்றனர்.

— 'சம்மட்டி' கோவிலூர்.

மூணாறு பகுதியை மூழ்கடிக்கத் திட்டம்

மூணாறு மேற்கு மலைத் தொடரில் அமைந்துள்ள அழகிய ஊர். இஃது உடுமலைப் பேட்டையிலிருந்தும, போதி நாயக்கனூரிலிருந்தும் பேருந்துத் தடங்களால் தமிழ் நாட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் தேயிலை, குளம்பி, ஏலக்காய் விளையும் பல தோட்டங்கள் உள்ளன. இவற்றில் மொத்தமாகத் தொழிலாளர்களையும் உள்ளடக்கி ஏறத்தாழ 80,000 மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 90 விழுக்காட்டினர் தமிழர்கள்

இப்பகுதியிலுள்ள இரண்டு மலைகளை இணைத்து அணைகட்டி மின்சாரம் எடுக்கவும், அவ்வணையை உலகின் குறிப்பிடத்தக்கச் சுற்றுலா ஏரியாக அமைக்கவும் கேரள அரசு திட்டமிட்டுள்ளது.

இத்திட்டம் செயற்படுத்தப்பட்டால் 7 பெரிய தேயிலை—க்குளம்பித் தோட்டங்கள், பல சிறப்பு மிக்க காடுகள், கோவில்கள், வீடுகள் ஆகியவை 300 அடி நீருக்குள் மூழ்கிவிடும். ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழப்பர். தொழிலாளர்கள் பெரும்பாலும் தமிழ் பேசும் மக்களே ஆவர் தமிழர் உலகெங்கும் தாக்கத்திற்குள்ளாகிக் கொண்டே இருக்கின்றனர். இவற்றைத் தமிழினத் தலைவர்கள், வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்களே? ஏன் இந்த நிலை?

ஆனால், இதன் தொடர்பாய் மூணாறுத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு சி. வரதன் அவர்கள் தடுப்பு நடவடிக்கைகளில் முனைப்பாக ஈடுபட்டுள்ளார் என்று தெரிய வருகிறது

— இ. இளஞ்சேரல் முதுபாண்டியன்.

வானொலியில் சமசுகிருத ஓலம்!

இந்த சனவரி முதல் வானொலியில் சமசுக்கிருத வேதத்தின் ஓலம் கேட்கப் போகின்றது. நடுவணரசு இந்தியாவிற்குட் பட்ட மாநிலங்களை ஒரே ஆளுமைக் குட்படுத்திய போதே இந்தக் கருத்தை மனத்திற்கொண்டு தான் என்பது இன்று தெளிவாகப் புரிகின்றது. தம் மினம் உயர்வான — அச்சாணியான பதவிகளில் உட்கார்ந்து கொண்டு, அவர்களின் இனத்திற்கு ஊக்கந்தரவல்ல செயற்பாடுகளை உருவாக்கத்தான் என்பதைப் பல நிலைகளில் நம்மவர் உணராமல் போனாலும், இன்றேனும் உணர்வர் என்பதில் ஐயமில்லை. காசுமீரத்து மக்களை அடிமை கொள்ள நினைத்தனர். இறுதியில் சேக் - அப்துல்லாவிடம் மண்டியிட்டனர். படைத்துறையின் முக நிலைக்கு மட்டும் போதுமெனக் கருதிப் பஞ்சாபியரைக் கீழிறக்க எண்ணினர். விளைவு? அவர்களின் உரிமைப் போராட்டத்தில் சிக்கித் திணறுகின்றனர். அசாமியரைப் பல்வேறு நாட்டு இனங்களுடன் சேர்த்து உண்மையான இனத்தை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் அடைந்ததோ பிரிவினையின் குரலுக்கு விடை சொல்ல வேண்டிய முடிவு.

தமிழகத்தில் இந்தி மொழியால் முடங்கி முக்காடிட்டுக் கொண்டனர். தெலுங்கர்களை இசைநாற்காலியாக்கினர். அவர்களோ நடுவணரசிற்கு அறைகூவலாக ஆட்சியமைத்து விட்டனர். ஒரு பக்கம் ஒருமைப்பாடென்று பறைசாற்றிக்கொண்டு மறுபுறம் வேதத்தைப் பரப்பி ஒற்றுமை சிதறுண்டு போக எண்ணுகின்றனர். இதன் விளைவு மற்ற மதத்தவர் என்ன செய்யப் போகிறார்களோ தெரியவில்லை. நாம் போராட அணியமாக வேண்டும். நாளொன்றுகுறிப்போம். நல்லவர்கள் திரளட்டும்.

—தென்னவன்கோ
உ.த.மு.க. வட்டச்செயலர்,
பொள்ளாச்சி.

ஒரே வழி பின்பற்றப்பட வேண்டும்

தமிழில் கலைச் சொற்களை மொழிபெயர்த்து எழுதுகின்ற போதும், திரிந்த பெயர்களைத் தூய்மைபடுத்தி மாற்றுகின்ற போதும், இடப் பெயர்களை எழுத்து வடிவில் வழங்குகின்ற போதும் அரசும், அரசு சார்ந்த நிறுவனங்களும் நன்முறையிலும், மக்கள் ஏற்கின்ற வகையிலும் தோய்ந்தாய்ந்த அறிஞர்களின் துணையைக் கைகொள்வது சிறப்புடைத்தாகும்.

எடுத்துக் காட்டாக எம். ஏ என்னும் பல்கலைக்கழகப் பட்டயத்தை அனைத்துத் தமிழ் நெஞ்சங்களும் ஏற்றுக் கொண்டு **'கலை முதுவர்'** (க. மு.) என்றே கொள்ளுகின்ற போது மதுரைப் பல்கலைக் கழகம் **'கலையியல் நிறைஞர்'** (க. நி.) என்று பட்டயம் வழங்குகிறது.

நீலமலை மாவட்டத்தின் தலைமையிடத்தின் பெயர் **'ஒற்றைக் கல் மந்து'** என்றே இருந்ததாக ஆய்வாளர்கள் அனைவரும் ஒருமுகமாக ஒத்துக்கொள்கின்ற போது அரசு **'உதக மண்டலம்'** என வழங்கி வருகின்றது.

மேலும் பல்லாயிரக்கணக்கான தமிழ்நாட்டு இடப் பெயர்கள் பேச்சு வழக்கில் மாறுதலுடன் வழங்கப்படினும் எழுத்து வடிவில் எழுதுகின்ற போது தூய்மை கையாளப் படுவதில்லை. எடுத்துக் காட்டாக, 'பல்லவர்புரம்', 'பல்லாவர'மாகவும், 'கோவன் புத்தூர்' 'கோயமுத்தூராகவுமே' எழுதப்பெற்று வருகின்றன இவை போன்ற குறைகளைக் களைந்து தூயதமிழ் இடப்பெயர்கள், கலைச்சொற்கள் நிலையாக வழங்க அரசும், தமிழ் வளர்ச்சி நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்; ஒரே வழி பின்பற்றப்பட வேண்டும்.

— தோ. இலக்குவன், மஞ்சூர்.

★

இதற்கொரு சட்டம் போடுங்களேன்!

'பொழுதலர்ந்தால் ஒரு சட்டம் புதிதாகப் பிறக்கும் என்ற நிலையில் தமிழகம் இருக்கிறது.

இதழ் உரிமைகளைப் பறிப்பதற்கு; இன்னுயிரை வெயர்வையாகவே கரைத்து மாயும் தொழிலாளர் தம் உரிமையைப் பறிப்பதற்கு; வரவு செலவு (நிதிநிலை) அறிக்கையில் அரங்கேறுமல் நினைவு போகும் வழிக்கெல்லாம் பணம் ஒதுக்குவதற்கு; முதல்வருக்குப் பிடித்தமான ஆட்களுக்குத் 'திடீர்' பதவி அளிப்பதற்கு என்றெல்லாம் புதுப் புதுச் சட்டம் இயற்றும் தமிழக அரசு, **மக்கள் மனத்தைக் கெடுக்கும் இழிவான ஆடை குறைவான, அம்மணப் படங்களை நடுப் பக்கத்தில் வெளியிடும் மஞ்சள் இதழ்களைப் பறிமுதல் செய்ய ஒரு புதுச் சட்டத்தைப் போடக் கூடாதா?**

'தமிழ் மக்கள் என் பக்கம்' என்பவர்களும், அண்ணாவின் அருமைத் தம்பி என்பவர்களும், 'தென் மொழிப் பாசறையில் பயின்றதாகவும், சொல்லப்படும் இனமானம் மிக்க அமைச்சர்கள் இருந்துமா இந்த இழிநிலை!

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்"

—'சுடர் மலர்' பழனி

★

இரங்கற் செய்தி

நீண்டநாள் தென்மொழி அன்பரும், அவநாசி வட்ட உ. த. மு. க, செயலாளரும், 'தமிழ்ச்சிட்டு' முகவருமாகிய திரு. சோ. ஆறுமுகவேலன் அவர்களின் மூன்று அகவை மகன் செல்வன். அருள்ஒளி கடந்த 28-12-82 அன்று எதிர்பாராது மறைந்துவிட்ட செய்தி கேட்டு மிகவும் வருந்துகிறோம். செல்வனைப் பிரிந்து துயருறும் அவர்தப் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அமைச்சர்,
தமிழ் நிலம்.

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின்
திருநெல்வேலி (தெற்கு, வடக்கு) மாவட்ட
அமைப்பு மாநாடு பிப்ரவரி 20-இல் நடைபெறுகிறது!

செய்தி - 1.

நெல்லை (தெற்கு, வடக்கு) மாவட்ட அமைப்பு மாநாடு வரும் பிப்ரவரி 20-ஆம் பக்கல் ஞாயிற்றுக்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற அனைத்து முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. கழக அன்பர்கள் மாநாட்டை வெற்றியுடன் நடத்த அனைத்துத் திட்டங்களையும் முன்னேற்பாடாக அமைத்துள்ளனர்.

மாநாட்டில், கருத்தரங்கம், பாட்டரங்கம், பட்டிமன்றம் முதலியவை சிறப்புற நடைபெறவிருக்கின்றன. அனைத்து நிகழ்ச்சிகளிலும் அறிஞர்கள், பாவலர்கள் பலர் கலந்துகொண்டு கருத்துரையும் பாட்டுரையும் வழக்குரையும் நடத்த ஏற்பாடுகள் செயயப் பெற்று வருகின்றன.

மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக, திருநெல்வேலி (வடக்கு) உ. த. மு. க. மாவட்ட அமைப்பாளர் திரு. **கரிகாலன்** க.மு. அவர்களும், செயலராக பாளையங்கோட்டை வட்டச் செயலர் திரு. **சிவந்தி ப. பொற்செழியன்** அவர்களும், பொருளராக, நெல்லை (தெற்கு) மாவட்டச் செயலர் திரு. **தென்னவன்கோ.** க.மு. அவர்களும் பொறுப்பேற்றுள்ளனர்.

மற்று நெல்லை வடக்கு, தெற்கு மாவட்டங்களில உள்ள வட்டப் பொறுப்பாளர்கள், திருவாளர்கள். புலவர் சிவசங்கு, த. அன்பழகன் (நெல்லை) க இளந்திரையன் க.இ; கல்.இ. (இராதாபுரம்) புலவர். சு. தென்மாறன், செ. நெல்லையப்பன் (நெல்லை), வே. இளவரசன், (தூத்துக்குடி), சங்க—தமிழ்ச் செல்வன் (நாங்குநேரி), தென். சு. இளங்கோ, ந. பொருணையன் (நெல்லைநகரம்) அ. தமிழன்பன் (நெல்லை-வடக்கு மாவட்டச் செயலர்), இரா. பாண்டியன் (நெல்லை - வடக்கு மாவட்டப் பொருள்). திருவாட்டி, எழில்தேவி கரிகாலன் (நெல்லை வடக்கு மகளிர் அமைப்பாளர்), இ. தூயஅன்பறிவன் (தென்காசி), செ. இப்பாரரசு (தென்காசி)— ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாக அமர்த்தப் பெற்றுள்ளனர்.

மாநாட்டின் இறுதியில் கழக முதல்வர் **பாவலரேறு பெருஞ்சித்திரனர்** அவர்களின் கொள்கை விளக்கச் சிறப்புப் பேருரை நிகழும்.

மாநாட்டை யொட்டி, கழக முதல்வர் **பாவலரேறு** அவர்களின் தென்மாவாட்டங்களின் சுற்றுச் செலவு கீழ்க் காணுமாறு அமைக்கப் பெற்றுள்ளது. அக்கால் அவர்கள் ஆங்காங்குள்ள ஊர்களில் பொதுக் கூட்டங்களில் கலந்துகொள்கிறார்.

15-2-83	செவ்வாய்	— சங்கரன் கோயில்
16-2-83	அறிவன்	— கடைய நல்லூர்.
17-2-83	வியாழன்	— தென்காசி.
18-2-83	வெள்ளி	— அம்பாசமுத்திரம்
19-2-83	காரி	— தூத்துக்குடி
20-2-83	ஞாயிறு	— நெல்லைமாநாடு

தென்மாவட்டங்களில் உள்ள உ. த. மு. க. அன்பர்கள், தென்மொழி அன்பர்கள், தமிழ்மொழி, தமிழினம், தமிழ் நாட்டு நலன் கருதும் பெரியோர்கள், பொது மக்கள் யாவரும் மாநாட்டிற்குத் தவறுமல் வந்திருந்து, பயன்பெற்று, மாநாடு சிறப்புற நடைபெறுதற்குத் துணை நிற்குமாறு மாநாட்டுச் செயற்குழு வேண்டிக் கொள்கிறது.

செய்தி - 2.

நெல்லை மாவட்டக் கீழ்ப்பகுதி உ. த. மு. க. செயற்குழுக் கூட்டம்

நெல்லை மாவட்டக்கீழ்ப்பகுதி உ. த.மு.க. செயற்குழு வரும் 6—2—83 ஞாயிறு மாலை 5 மணியளவில் ஏரலில் (ரகு பில்டிங்கில்) நடைபெறவிருப்பதால், வட்ட மாவட்ட அன்பர்கள் தவறுமல் வந்து கழக ஆக்கங் குறித்த செயற்பாடுகளாற்றுவது தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு, தங்கள் மேலான கருத்துரைகளை வழங்குமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

நெல்லை
7—1—83

புலவர். ச. சிவசங்கு
தலைவர்
உ.த.மு.க. நெல்லை (தெற்கு) மா. வ.

செய்தி - 3.

சேலம் மாவட்ட உ.த.மு.க. அன்பர்களுக்கு ஓர் அழைப்பு

சேலம் மாவட்ட உலகத் தமிழின முன்னேற்றக் கழக அன்பர்களின் கலந்துரையாடல் கூட்டம் ஒன்று வரும் 30—1—83 ஞாயிறு (சுறவம் கஎ) காலை 10 மணியளவில், சேலம் நடுவண் பேருந்து நிலையத்திற்குத் தெற்கே உள்ள 'வேதா விடுதியில்' நடைபெற உள்ளது. தொடர்புள்ள மாவட்ட, வட்ட உ.த.மு.க. அன்பர்கள் அனைவரும் தவறுமல் இக்கூட்டத்திற்கு வந்திருந்து, பலவகையான செயற்பாடுகள், விரைவில் நடத்த விருக்கும் சேலம் மாவட்ட உ.த.மு.க. அமைப்பு மாநாடு குறித்துக் கருத்துரை வழங்குமாறும் கூட்டத்தைச் சிறப்புடன் நடத்த உதவுமாறும் அன்புடன் வேண்டிக்கொள்ளப் பெறுகிறது.

சேலம்
1—1—83

மு. பழ. சதாசிவம்
மாவட்டச் செயலர், உ.த.மு.க.
சேலம் மாவட்டம்

செய்தி - 4.

பெரியார் மாவட்டம் தொடக்கவிழா நடத்துவது குறித்துக் கலந்துரையாடல் அழைப்பு

தமிழன்பரீர்,

வருகின்ற திருவள்ளுவராண்டு 2014 — சுறவம் — 17ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை (30 - 1 - 83) அன்று, காலை 10 மணியளவில் கீழ்க்காணும் முகவரியில், பெரியார் மாவட்டக் கிளைத் தொடக்க விழா குறித்த, 'கலந்துரையாடல்' நிகழவுள்ளது. பெரியார் மாவட்டத்தில் ஆங்காங்கே உள்ள தென்மொழி, தமிழ் நிலம், உ. த. மு. க அன்பர்களும், மற்ற தமிழ் ஆர்வலர்களும் கலந்து கொண்டு, கருத்தறிவிக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

முகவரி : புலவர். **மு. அரசமாணிக்கம்**
வட்ட உ. த. மு. க. தலைவர்,
மெய்யறிவு இல்லம்,
4/192, ஆசிரியா குடியிருப்பு,
பெருந்துறைச்சாலை, ஈரோடு-638 009.

அன்புடன்,

தென்மொழி **நா. இளமாறன்**
முதன்மைக்குழு உறுப்பினர் உ. த. மு. க.
காவேரி மனநகர், குதிரைக்கல்மேடு,
பவானி - 638 302

★ தமிழர் எனப்படுவோர் எல்லாரும் ஆங்கிலம் அல்லது கலப்புத் தமிழ்தானே பேசுகிறார்கள்!

★ தமிழைப் பேசா தமிழனைக் காணோமே!

★ உலகத் தமிழர்கள் ஒன்றுபட வேண்டும் என்னும் நாங்களா பிரிவினையை உண்டாக்குகிறோம்?

★ மக்களை வேறு பிரிக்கின்ற பிரிவினையை நீங்கள் தானே உருவாக்குகிறீர்கள்!

★ 'தமிழ் நிலம்' வெளியீட்டு விழாவில் பாவலரேறு உரையின் 6-ஆம் தொடர்!

இது நாள் வரைக்கும் நாம் உண்டாக்கியிருக்கிற, பல சொற்களை நாம் இழந்து விட்டோம் இருக்கிற சொற்களையும் நாம் இழந்து கொண்டிருக்கிறோம்! நம்முடைய குழப்பத்தினாலே, வேறு மொழியினுடைய தாக்குதலினாலே, வேற்று மொழிப் பற்றினாலே, இன்னும் தெளிவாகச் சொன்னால், வேற்றுமொழிக்கு நாம் அடிமைப் பட்டதினாலே, பல வகையான நம்முடைய செந்தமிழ்ச் சொற்களை நாம் இழந்து கொண்டே வருகிறோம். ஏற்கனவே. பல ஆயிரக்கணக்கான சொற்கள் போய் விட்டன! இன்றைக்கும் போய்க் கொண்டேயிருக்கின்றன! இன்றைக்கு நாம் 'ஐயா' என்ற சொல்லை மறந்து விட்டு "சார்" என்று தான் சொல்லுகிறோம்! அண்ணா, தம்பி என்கின்ற சொற்களை மறந்து விட்டு, "என்னங்க பிரதர் எங்கே போறீங்க!" என்று கேட்கிறோம்! இது யார் என்று கேட்டால், என்னுடைய மனைவி என்று சொல்வதற்கு வெட்கப்படுகிறோம்! "என் Wife-ங்க! என்று சொல்லுகிறோம்! இவர்கள் யார் என்று கேட்டால் இவர்கள் என்னுடைய தந்தையார், தாயார், என்னுடைய அன்னையார் அல்லது அப்பா என்று சொல்லுகிறதற்கு வெட்கப்பட்டுக் கொண்டு, இவர் என்னுடைய Father, இவர் என்னுடைய 'Mother' என்று சொல்லுகிறோம்! எவ்வளவு இழிவான ஒரு மனவுணர்வு நமக்குத் தோன்றியிருக்கிறது! இந்த உணர்வை நாம் எப்பொழுது போக்கிக் கொள்கிறோமோ, அப்பொழுது தான் தாய் மொழி உணர்வு நமக்குத் தோன்றும் அந்த உணர்வு தோன்றினால் தான் இனவுணர்வும் நமக்குத் தோன்றும்! இல்லையென்றால் 'பிரதரா'யிருப்போம்! 'சார'ாயிருப்போம்! தமிழனாயிருக்க மாட்டோம்! தமிழுணர்ச்சி வராது!

இவர்கள் என்னுடைய பக்கத்திலே உட்கார்ந்து கொண்டிருக்கிற பொழுது, இரண்டு பேரும் ஒரே இனத்தினர் என்று நாம் நினைக்கத் தோன்றுகின்றது; ஆனால் வெளியே போய் விட்டால் அவர் வேறு சாதி நான் வேறு சாதியாகப் போய் விடுகிறோம்! எப்படி ஒன்றுபட முடியும்? அவர், அவர் சாதிக்குப் பாடுபடுகிறார், நான் என் சாதிக்குப் பாடுபடுகிறேன என்று சொன்னால் இனம் எப்படி இருக்கும்? எண்ணிப்பார்க்க வேண்டும், இதை!

நான்கு உடன்பிறப்புகள் உள்ள ஒரு குடும்பத்திலே, நான்கு உடன் பிறந்தவர்களும், நான்கு வகையான போக்குடையவர்களாக இருந்தால் எப்படி அந்தக் குடும்பம் குடும்பமாக இருக்க முடியும்? ஒருவரை ஒருவர் எதிர்த்துக்கொண்டுதான் இருக்கமுடியும்? எனவே, அடிப்படையான ஒரு தேவை நமக்கு மொழித் தேவை! மொழிப்பற்று! மொழிப் பற்று தான், இனப்பற்றை இன முன்னேற்றத்தின் ஒரு தேவையை - உருவாக்கும்! அந்த நிலையிலே இந்த இயக்கத்திற்குத் தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம் முதற்கொள்கையாக வைக்கப்பட்டிருக்கிறது. உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்திலே பல, உருது பேசுகின்ற தமிழர்கள் அல்லது தமிழ் பேசுகின்ற முசுலீம்கள் பலபேர் உள்ளார்கள்! கிருத்துவர்கள் வந்திருக்கிறார்கள்! அதேபோலக் கன்னடம் பேசுகின்றவர்கள் வந்திருக்கிறார்கள்! தெலுங்குத் தாய் மொழியினர் வந்திருக்கிறார்கள்! அவர்களை, நாங்கள் என்ன செய்வது? பலபேர் கூறுகிறார்கள். இல்லை, தமிழ் பேசுகின்றவர்களை மட்டும் தான் நாங்கள் கழகத்திலே சேர்க்க வேண்டும் என்று. நான் அவர்களைக் கேட்கிறேன். தமிழர் எனப்படுவார் எல்லோரும் ஆங்கிலம் தானே பேசுகிறார்கள்! அல்லது வேறு ஏதாவது எல்லாரும் கலப்புத் தமிழ் தானே பேசுகிறார்கள் ஒரு பத்துச் சொற்கள் பேசினால் இரண்டொரு சொல் தானே தமிழாக இருக்கிறது! இவர்களை மட்டும் எப்படி தமிழர் என்று சொல்லுகிறது? எனவே **இவர் தமிழரா அவர் தமிழரா என்று ஆராய்வதை விட்டு விட்டு, யாருமே தமிழர் இல்லை என்ற முடிவுக்கு நாம் வந்து விட வேண்டும்! அதன் வெளிப்பாடு என்ன என்றால், எல்லாரும் தமிழராக மாற வேண்டும்! அப்படி மாறினால் தவிர இந்த இனத்திற்கு விடிவே கிடையாது!** நீங்கள் வேண்டுமானால் வரலாற்றை எடுத்துப் பாருங்கள்! இந்த இனத்திலே அழிவு எப்படி எப்படி தோன்றியிருக்கிறது. இன்னும் என்னென்ன அழிவு தோன்ற இருக்கிறது என்பதை, தொடக்ககால வரலாற்றிலும் அண்மைக்காலத்தில் நடந்து வருகின்ற வரலாற்றிலும் எண்ணிப்பாருங்கள்! நம் இனம் அழிந்து போகவேண்டும் என்பதிலே, இந்தியாவிலே பல இனத்தவர்களுக்கு ஒரு குறி இருக்கிறது. அந்த நிலைக்கு நாம் ஆளாகக் கூடாது.

அடுத்தது சாதியற்ற, மத வேறு பாடற்ற சமநிலைக் குமுகாயம்' என்பது, இந்த இயக்கத்திற்கு இரண்டாவது கொள்கையாக இருக்கிறது சாதியே இருக்கக் கூடாது! பலபேர் சொல்லுகிறார்கள் நாங்களெல்லாம் இலவயமாய் படிக்கிறதற்கு, சலுகை பெறுகிறதற்கு இந்தச் சாதியைச் சொல்ல வேண்டியிருக்கிறது என்று சொல்லுகிறார்கள்! நான் உங்களை மன்றாடி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். முதலிலேயே சொன்னேன், இந்த இனமே தாழ்த்தப்பட்ட இனமாகவும், பிற்படுத்தப்பட்ட இனமாகவும் இருக்கிறது. இதிலே முன்னேற்றம் என்பது எங்கே இருக்கிறது? பொருளால் முன்னேறி விட்டால் போதுமா?! பொருளியல் முன்னேற்றம் என்பது யாரிடத்திலும் இருக்கிறது. "பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள" ஒரு திருட்டுத்தனம் பண்ணுகிறவன் கொலையாளி குற்றவாளி எல்லாரும் உண்மையான பெரிய 'மனிதனா'? பெரிய மாந்தனா? அல்லது சிறப்புக்குரியவனா? பெருமைக்குரியவனா? எண்ணிப் பார்க்க வேண்டும்! உயர்ந்த சாதியாயிருந்தால் அவன் பெருமைக்கு உரியவனா? "கருமமே கட்டளைக் கல்" என்று குறிப்பிடுவதைப் போல அவனுடைய வினைநிலை எப்படி இருக்கிறதோ அவனுடைய செயல்நிலை எப்படி இருக்கிறதோ அது தான் பெருமைக்குரியதாக இருக்க வேண்டும். அவனுடைய சாதியில்லை! அஃது அங்கு வரக்கூடாது. அதே போல இந்த இனம்தாழ்த்தப் பட்ட இனமாகவும், வீழ்த்தப்பட்ட இனமாகவும் ஏற்கனவே இருந்துவிட்டதனாலே இப்பொழுது எல்லாருமே வளர்ச்சி பெறச்கூடியவர்கள் என்று சொல்லிவிடுகிறோம். இவ்வாறு அந்த நிலை வருமா? வரச்செய்ய வேண்டும். அந்த முயற்சி நடைபெற வேண்டும், இனி வருமா? அடுத்து, இந்த இயக்கத்தில் சேர்ந்தால் தங்களுக்கெல்லாம் ஏதாவது வேலை போகுமா என்று கேட்கிறார்கள்! உண்மையாக இன்னொன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும் வேலை போகுமா என்று கேட்கிறது தமிழர் மட்டும் தான்! அங்கே இருக்கிறவர்கள் எல்லாம், ஏதாவது வேலை போகுமா' என்று கேட்பதில்லை அவர்கள், அந்த ஆரிய இனத்துக்குப்பார்ப்பன இனத்துக்கு, எத்தனைக்கொள்கைகள் கட்சிகள் இருக்கின்றனவோ, அத்தனைக் கட்சிகளிலும் எல்லாரும் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை போய்விட்டதா? எப்படி வேலை போகும்? நாம் என்ன செய்கிறோம்? கத்தி எடுத்துக் கொண்டா குத்தப் போகிறோம? அல்லது துமுக்கி எடுத்துக்கொண்டு சுடப் போகிறோமா? இந்த இனம் முன்னேறவேண்டும் என்று சொல்கிறோம்! அதிலே என்ன தவறு?

நாங்கள் பிரிவினையை உண்டாக்குகிறோம்!" என்று சொல்கிறான்! நாம் நன்றாக எண்ணிப் பார்க்க வேண்டும். பிரிவினையை நாங்களா உருவாக்குகிறோம்! நாம் ஒன்றுபடுகிறதே,— நாம் ஒன்றுபட வேண்டும் என்று சொல்லுகிறதே. நாங்கள் பிரிவினைக்காரர்கள் இல்லை என்று சொல்லுகிறதில்லையா! 'உலகத் தமிழினம் ஒன்றுபட வேண்டும்' என்று சொல்கிறோம் எங்கு நாம் பிரிவினையை உண்டாக்குகிறோம்? அவனுக்கு என்ன என்று சொன்னால். ஆள்களில் பிரிவினையை உண்டாக்கலாமாம். நாம் நிலத்திலே பிரிவினையை உண்டாக்குகிறோம், என்று அவன் நினைக்கிறான்! நாங்கள் என்ன சொல்கிறோம்; நிலத்திலே, பிரிவினையை உண்டாக்கலாம்; அதிலே ஒன்றும் தவறு இல்லை: ஆள்களில் தான் பிரிவினையை உண்டாக்கக் கூடாது என்று சொல்கிறோம்! (கைதட்டல்) ஏன்? எதற்கையா அவன், பிரிவினையை உண்டாக்குகிறது! அவனுக்கென்ன இரண்டு கொம்பு முளைத்திருக்கிறதா? அவன் மேலே இருந்து பொத்தென்று கீழே விழுகின்றானா? நாங்கள் என்ன அவனை வணங்க வேண்டுமா! அவன் மட்டுந் தான் உள்ளே போக வேண்டுமா ஓரிடத்துக்குள்ளே (கோயிலுக்குள்ளே). எண்ணிப் பார்க்க வேண்டாமா?

மாந்தனை இழிவுபடுத்துகின்ற ஒரு பிரிவினையை நீ வரவேற்கிறாய்! ஒருவனை உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்று சொல்கிற அந்த உண்மையை, அந்தப் பிரிவினையை நாட்டில் சட்டமாக்கி இருக்கின்றாய்! நாங்கள் நிலத்தைச் கேட்டால் அதில் என்ன சிக்கல் வந்து விட்டது! இது யாருடையது? உங்கள் வீட்டு சொத்தா இது! நீ எடுத்துக்கொண்டு எங்களுக்குத் தரமாட்டேன் என்று சொல்லுகிறதற்கு?

—(தொடரும்)

தெரியுமா செய்தி?

1. திமிங்கலம் தன்குட்டிக்கு நிதமும் ஒரு கல்லை (தொன்) அளவிலான மிகவும் ஊட்டம் நிறைந்த பாலினைக் குடிக்கக் கொடுக்கின்றது.
2. கேரளாவிலுள்ள 'சோரனூர்' என்னும் பெயர் வடிவம் 'சேரனூர்' என்பதே ஆகும்.
3. பம்பாயிலிருந்து மேற்கில் 220 அ. மா. தொலைவிற கடலுக்குள் சமையலடுப்பு எரிவளி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
4. கதிரவக் குடும்பத்தில் ஒன்பது கோள்கள் என்பது பழைய செய்தி. இப்பொழுது தொகை பத்தாகின்றது 28-2-1982 அன்று கண்டு பிடிக்கப்பட்ட அப்புதிய கோளுக்கு" 1982 டி. வி," எனப்பெயரிடப்பட்டுள்ளது.
5. கிளிகளில் 316 வகைகள் உள்ளன.
6. இவ்வுலகில் ஏறத்தாழ 55,000 வெந்நீரூற்றுகள் உள்ளன.
7. அமேசான் ஆற்றில் வளரும் ஒருவகை அல்லியின் இலையினது குறுக்களவு 6 அடி ஆகும்.

— கி. இளஞ்சேரல் முதுபாண்டியன்

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடியவர்கள் தென்மொழி கா. இளமாறன், திருவாட்டி இரேணுகா மகிழ்நன், செல்வி கயல்விழி, குழந்தைகள் தமிழ்ச்செல்வி, தேன்மொழி ஆகியோர் ஆவர்.

ஒவ்வொருநாளும் தொடர் நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களுள் சிறப்பாகக் குறிக்கத்தக்கவர், ஈரோடு வாசவி கல்லூரிப் பேராசிரியரும், பன்மொழிப் புலவரும், சிறந்த மொழியாய்வாளரும் பல்வேறு அகரமுதலிகளின் தொகுப்பாசிரியரும் ஆகிய உயர்திரு. மு.ச. சிவம். க.மு. திருவாளர்கள், பேரா. கா. அரங்கசாமி க. மு. (கோபி), தென்மொழி ந. முத்துக்குமரனார் (பல்லடம்), மா. ஆறுமுகம் (பல்லடம்) சு. ஞானசிகாமணி (மன்னார்குடி), பாரா. மகிழ்நன் குடும்பம் (திருச்சி), புலவர் இ. மு. இராசமாணிக்கம், (ஈரோடு), பொற்செழியன் (வெங்காலூர்), சேரலாதன் (வெங்காலூர்), துரை தென்னவன் (சென்னை), ... வர் பொதிகைச்செல்வன், ... ச. ஆனந்தன், (கோபி), கல்லை. அருட்செல்வன் (வேடசெந்தூர்) வேலவன் (வத்தலக்குண்டு) நல் இளஞ்செழியன் (வேடசெந்தூர்), தென்மொழி ப. துரையரசன், நா. இளமாறன் குடும்பம், சு. இளங்கோவன் (திருச்சி), குழந்தை ஈகவரசன் (திருச்சி) புலவர் மா. அரசு, (கோபி பாளையம்) பாவலர் குமர. நடவரச ஈவப்பனார், (சிதநோடு). புலவர் பொன் முகிலன் க மு. (கூகலூர்), பேரா. கு. வெ. கி. ஆசான் (கோவை) செல்வி கயலவிழி (திருச்சி) தொ. செ. கந்தசாமி (தொட்டியபட்டி), திருமணி (பல்லடம்) வாசு (பல்லடம்) மு பழ. சதாசிவம் (சேலம்), பைந்தமிழ்ப் பித்தன (மேட்டூர் அணை) முதலியோர் ஆவர்.

மொத்தத்தில் அனைத்து நிகழ்ச்சிகளும சிறப்புற அமைந்திருந்தன. பாவலரேறு அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் மொத்த நேரம் 31மணி, 32 நிமையங்கள் ஆகும. அவர்களின் உரைகளை ஆறு நாடாப் பதிவான்கள் பதிவு செய்தன. ஒரு பதிவானுக்கு ஏறக்குறைய 30 நாடாக்கள் ஆயின என்பவை குறிக்கத்தக்கனவாகும்.

நிகழ்ச்சியின் இறுதியில் பாவேந்தர் இலக்கியப் பேரவை சார்பாக இரண்டு தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றன. அவை வருமாறு.

தீர்மானம்—1

பவானி என்னும் இத்திருநகரின்கண், கூடு துறையில் அமைந்த திருக்கோவிலில் வீற்றிருக்கும் இறைவனின் பெயர் 'திருவானி கூடல் நண்ணாவுடையார்' என்பதாகும். இறைவியின் பெயர் 'பண்ணார் மொழியம்மை' என்பதாகும். இஃது இடைக் காலத்தில் வடமொழி வெறியர்களால், திருக்கோவிலில் நுழைந்து விட்ட மாற்றுக் கருத்தினரால், முறையே, 'சங்கமேசுவரர்' என்றும், 'வேதநாயகி' என்றும் வழக்கிற் கொண்டுவரப் பெற்று விட்டன.

மாயவரத்தை மயிலாடுதுறையாக மாற்றிய போற்றுதலுக்குரிய தமிழ்நாட்டரசு இவ்வூர் இறைவன் இறைவி பெயர்களை முன் போலவே முறையே, 'நண்ணாவுடையார்' என்றும், 'பண்ணார் மொழியம்மை' என்றும மாற்றித்தரவேண்டுமென்று, பவானி பாவேந்தர் இலக்கியப் பேரவை கூட்டிய திருக்குறள் தொடர் சொற்பொழிவின் நிறைவு நாளான இன்று (2-1-83) கேட்டுக் கொள்ளப் பெறுகிறது.

தீர்மானம்—2

வேலூரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய மதிப்பிற்குரிய புலவர் கீரன் அவர்கள், தமிழ்ப்போற்றிப் பாடல்கள் திருக்கோவில்களில் கருவறைக்குள் ஓதத்தக்கவை அல்ல என்றும், வடமொழி மந்திரங்கள் மட்டுமே கருவறைக்குள் ஓதப்பெற வேண்டும் என்றும் தமிழ்ப் போற்றிப் பாடல்களும், பாசுரங்களும் கருவறைக்கு வெளியேதான் ஓதத்தக்கவை என்றும் பேசியுள்ளார். இது தமிழர்களாகிய நம் அனைவரின் மனத்தையும் புண்படுத்துவதாகும். ஆதலின் நிறைந்த தமிழ்ப்புலமையும் அரிய ஆங்கிலப் புலமையும் பெற்ற மதிப்பிற்குரிய புலவர் கீரன் அவர்கள் தம் கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டும் என இத்திருக்குறள் தொடர் சொற்பொழிவின் நிறைவு நாளில் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

★

'தமிழ் நில வரலாறு' தடை செய்யப்பட்ட வரலாறு

— அரிமா —

(முன்னுரை —

'தமிழ்நில வரலாறு' — என்னும் ஓர் அரிய, உண்மையான வரலாற்று நூலை எழுதிய, பெருமை மிக்க ஆசிரியர் பண்டாரகர் கோ. தங்கவேலனார் என்னும் வரலாற்றுப் பேராசிரியர், அந்நூல் தமிழ் நாட்டு அரசால் 1976-ஆம் ஆண்டு வெளியிடப் பெற்றது. அந்நூல் முற்றும் தூய தனித் தமிழில் எழுதப் பெற்றது; அந்நூல் வெளி வருவது அதிகாரத்திலும் தமிழ்த் துறையிலும் இருந்த பார்ப்பனர் பலருக்கும் பிடிக்கவில்லை. எனவே அந்நூலை வெளிக் கொணர்ந்த தி.மு.க. அரசு, நெருக்கடி நிலையால் கீழிறக்கப் பட்டதும், அந்நூலை எவ்வாறேனும் திட்டமிட்டுத் தடை செய்து விடவேண்டுமென்று உறுதி கொண்டனர்.

அதன்படி அந்நூலை மறு ஆய்வுக்கென, பார்ப்பன அடிமை ஒருவரிடம் அளித்து, அந்நூல் வெளிவருவதைத் தடைசெய்து கருக்தறிவிக்கச் செய்தனர். அதற்கு ஆளாகி, அந்நூலை ஒழித்துக்கட்டிய பெருமை, சென்னைக் கிறித்துவக் கல்லூரியின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர், திரு. ஆலால சுந்தரம் செட்டியார்) அவர்களைச் சாரும். அவர் அந்நூலை பற்றி அரசுக்கு எவ்வாறு அறிக்கை கொடுத்தார், அந்நூல் எப்படித் தடை செய்யப் பெற்றது என்பன இக்கட்டுரையில் விளக்கப் பெறுகின்றன.

இதுபற்றி ஏற்கனவே 'தென்மொழி'யில் கண்டனக் கட்டுரை வெளியிடப் பெற்று, அந்நூலின் மேலுள்ள தடையை நீக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப் பெற்றது. அதன் பின்னர், தருமபுரியில் நடந்த தி.க. மாநாட்டிலும், உ. த. க., உ. த. மு. க. மாநாடுகளிலும் தடை நீக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப் பெற்றது கலைஞர் அவர்கள் 'முரசொலி'யிலும், அந் நூலுக்குள்ள தடையை நீக்க வேண்டும் என்று அரசுக்கு எழுதினார். ஆனால், இதுவரை பயன் கிடைக்கவில்லை - அ. தி. மு. க, அதன் மேல் உள்ள தடையை நீக்காமலிருப்பதற்கு, அந்நூலில் கலைஞரைப் பற்றிப் பெருமையாக எழுதப்பெற்றிருப்பதே கரணியம் என்று தெரிய வருகிறது.

இந்நிலையில், பொதுமக்களும் 'தமிழ்நிலம்' அன்பர்களும் உண்மையை அறிந்து கொள்ளவேண்டும என்னும் நோக்கத்துடன் கட்டுரையாசிரியர் 'அரிமா' அவர்கள் அது தடை செய்யப்பெற்ற உள்முகச் செய்திகளை அம்பலப்படுத்தியுள்ளார். அனைவரும் கட்டாயம் தெரிந்துவைத்திருக்க வேண்டிய செய்திகள் இவை.

— ஆசிரியர்.)

பேராசிரியர், பண்டாரகர் கோ. தங்கவேலனார் அவர்களால் ''தமிழ்நில வரலாறு'' என்னும் தமிழ்நாட்டு வரலாற்று நூல், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தால் கல்லூரி மாணவர்க்கென படைத்துத் தருமாறு கோரப்பட்டது. 1975-ஆம் ஆண்டுக்கு முன்னரே எழுதி முடிக்கப் பெற்று நிறுவனத்திடம் ஒப்புவிக்கப்பெற்றது. பல மாதங்களுக்குப்பின்னர், 1976-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் வெளியிடப் பெற்றது. திராவிட முன்னேற்றக்கழக அரசு பதவியினின்றும் இறக்கப்பட்ட ஒரு திங்கள் கழித்து இந்நூல் வெளி வந்தமையால், அக்காலத்தில்—நெருக்கடிக் கால கொடுமையர்கள் தாவே, சுப்பிரமணியன் காலத்தில்—இங்குள்ள 'தமிழ்த்' தலைவர்களால் தூண்டுவிக்கப் பெற்று, நூலின் விற்பனையை நிறுத்திவைக்குமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. ஏறத்தாழ ஈராயிரம் படிகள் அச்சிடப்பெற்றன; ஆசிரியர் தங்கவேலனார்க்கு வழங்கிய ஐந்து படிகளுடன் நாற்பதுக்கும் மேற்பட்ட படிகள் விற்பனையாகியுள்ளன.

நூலை முற்றிலுமாகத் தடை செய்துவிட வேண்டும் என்னும் நோக்கில் இருட்டுச் சட்டத்தைக் கையிலெடுத்துக் கொண்டு கிளம்பினர். முறைப்படி ஒரு 'பேரறிஞரிடம்' ஆய்வுக்கு நத்தினைப் பெற்றுத் ''தமிழ்நில வரலாற்றினை'' ஒழித்துவிடத் திட்டமிட்டனர். அவர்கட்குக் கருவியாக வந்து வாய்த்த 'பேரறிஞர்' யார் தெரியுமா?

நாற்பத்திராண்டுகள் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் 'பேராசிரியராக'க் குப்பை கொட்டிய திருவாளர் ஆலால சுந்தரம் பெருமகனார் (!).

அவர் மண்டையிலிருந்து வெடித்துக்கிளம்பிய ஆங்கில 'ஆய்வுரை' (!)—இதோ!

(மேற்கோள்களுக்குள்ளும் அடைப்புகளுக்குள்ளும் அமைந்தவை அவரே எழுதியவை. மற்றவை வெறும் மொழியாக்கம்.)

''தமிழ் நில வரலாறு''—என்னும் இந்நூல் செயற்கையான நடையில் (artificial style) எழுதப்பட்டுள்ளது.''

''புழக்கத்திலுள்ள பல கலைச்சொற்கள் தவிர்க்கப்பட்டுப் புதிய சொற்கள் கையாளப் பெற்றுள்ளன. (Many Popular work are removed and coined works are inserted in their places)''

''இந்நூலின் ஆசிரியர், நூலின் நெடுகலும் பல தவறான செய்திகளைத் தருகிறார்''

''பன்னிரண்டாம் படலத்தில் (chapter 12) நயன்மைக் கட்சி (Justice party), திராவிடர் கழகம் Dravidar Kazhagam திராவிட முன்னேற்றக்கழகம் Dravida Munnetra Kazhagam ஆகிய இயக்கங்களின் தோற்றம், வளர்ச்சி, ஈட்டம் (achievement) பற்றி முப்பது பக்கங்களில் விளக்கப் பட்டுள்ளது. அத்துடன் தி. க, தி மு. க. ஆகியவற்றின் கொள்கைகள் (Ideology) பலவிடங்களில் கூறப்பட்டுள்ளன.''

''தமிழ் நில வரலாறு'—என்பது—தவறான தலைப்பாகும். 'தமிழக வரலாறு'—என்பதே சரி.''

''இரண்டாம் படலம் (Chapter II) 'தொல்பழங்காலம்' Pre-Historic period) என்பது 'வரலாற்றுக்கு முற்பட்ட காலம்' என்றிருத்தல் வேண்டும்,''

''நூல் நெடுகலும் 'சங்கம்' என்பதை நீக்கிவிட்டுக் 'கழகம' என்றே பயன்படுத்தியுள்ளார்''

4. (அ) 'கழகக் காலச் சேரர்'
   (ஆ) 'கழகக் காலச் சோழ வேந்தர்'
   (இ) 'கழகக் காலப் பாண்டிய வேந்தர்'
   போல்வனவாகும்.

'சென்னைக் கிறித்தலக் கல்லூரியில் பணியாற்றிய நாற்பத்தீராண்டுப் பணிக்காலத்தில் 'சங்க காலம்' என்பதைக் 'கழகக் காலம்' என்று குறிப்பிட்ட ஒரு நூலை இது வரையில் நான் கண்டதில்லை. 'சங்கம' என்பதைச் சமற்கிருதச் சொல்லாகக் கருதிக் 'கழகம்' என்று பெய்திருக்கிறார் போலும்! இப்பழைமைக் கொள்கை (Conservative Policy) ஊக்குவிக்கப் பெறக் கூடாது. தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகள்கூடச் 'சங்கம்'—தமிழ் என்றே கொண்டிருந்தார். மொழி என்பது சிந்தனையின் ஊர்தி (Vehicle of Thought). பொது மகனும் (Common man) புரிந்துகொள்ளும் வகையில் புழக்கத்திலுள்ள சொற்களையே கையாள வேண்டும்.

'கடிசொல் இல்லைக் காலத்துப் படினே'
(தொல் சொல் 56)

என்கிறார் தொல்காப்பியர். தமிழ்ச் சொற்களாக இல்லாவிடினும் அவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும்'.

'ஒருவராலும் புரிந்துகொள்ளவியலாத 'குமுகாயம்' என்னும் சொல்லைப் பலவிடங்களில் பயன்படுத்தியுள்ளார்.'

'Sir. P. Thyagaraja Chettiar' - 'வயவர் பி. தியாகராயச் செட்டியார்' என்று குறிப்பிடப்பட்டுள்ளார். 'வயவர்' என்னும் சொல்லின் பொருள் விளங்கவேயில்லை.'

'உண்மையில்-இந்நூலில் காணப்படும் பல புதிய சொற்களின் பொருள் இன்னதென்றே விளங்கவில்லை. நூலின் இறுதியில் அமைந்த கலைச்சொற் பட்டியலைக் கண்ட பின்பே அவற்றின் இணையான சொற்களின் வழி பொருள் காணமுடிந்தது'.

'திருநாவுக்கரசர் உயிர்நீத்தார்' என்றும், 'திருஞான சம்பந்தர் மண்ணுலகைவிட்டு மறைந்தார்' என்றும் இந் நூலாசிரியர் கூறுகிறார். அவ்வாறு கூறலாகாது. (We should not say that the saints died; but we should say that they have attained Salvation).'

'1967-இல் தமிழ் பயிற்று மொழி ஆவதற்குத் தி.மு.க. அரசே கரணியமென்று கூறப்பட்டுள்ளது. இது தவறான செய்தியாகும். 1946 — 47இல் கல்வியமைச்சராகவிருந்த தி. சு. அவினாசிலிங்கம் செட்டியாரே பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழ் பயிற்று மொழி ஆவதற்குக் கரணியமாக அமைந்தவர்.'

'சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றிய பெருமை தி.மு.க.வையே சாருமென்று கூறப்படுகிறது. ஆனால் பெயர் மாற்றத் தீர்மானம் 1957-இல் சட்டப் பேரவையில் காமராசர் அமைச்சரவையால் நிறைவேற்றப் பட்டது.'

'பார்ப்பன ஆதிக்கம்' (The Predominance of the Brahmins) என்றொரு தனித் தலைப்பின் கீழ்ப் பெரியாரின் கூற்றைத் தந்துள்ளார் இந்நூலாசிரியர்,

(8-ஆம் பக்கம் பார்க்க)

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)

1911-இல் சென்னை மண்டிலத்தில் பார்ப்பனர் 13, 10, 360 பேர் இருந்தனர்'

'பார்ப்பனரல்லாதார் 3, 59, 19, 694 பேர் இருந்தனர். அஃதாவது மொத்த மக்கள் தொகையில் 96·5 விழுக்காடு. மீதியுள்ள 3·5 விழுக்காடு பார்ப்பனருடையது. ஆனால் இவர்கள் கல்வி, அரசுப்பணி, ஆட்சி மன்றம் முதலியவற்றில் 95 விழுக்காட்டிற்கும் மேலாக நிரம்பி இருந்தனர்''

''கல்வித் துறையிலும் அரசுப் பணியிலும் பார்ப்பனர் பெற்றிருந்த மேலாளுமையைச் சுட்டிக் காட்டுவதாகும். நயன்மைக் கட்சி, தி. க, தி. மு. க ஆகிய இயக்கங்களினால் பார்ப்பனரல்லாதார் எவ்வாறு முன்னேற்றங் கண்டனர் என்பதைத் தெளிவாக்குகிறார் இந்நூலாசிரியர்.''

''மேலும், அடுத்து வரும் வரிகள் உண்மையில் பார்ப்பனரை மிகவும் புண்படுத்துவனவாகும்.''

'வெள்ளையன் மேலே அமர்ந்து மிதிக்க, பார்ப்பனன் ஆட்டிப் படைக்க, தமிழ் நாட்டு மக்கள் எல்லையில்லாத் துன்பங்களைத் துய்த்துக் கொண்டிருக்கும் போது தத்தம் சாதி உணர்வுகளால், சங்கங்களையமைத்துக் கொண்டு இன்பம் கண்டனர்.'

'படிப்போரை மிகவும் புண்படுத்தும். அவை உண்மைகளாக இருப்பினும் வேறு வகையில் சொல்லப் பெறல் வேண்டும்.'

'1955-இல் பெரியார் தன்மதிப்பு இயக்கத்தைத் தொடங்கினார். (Self - Respect Movement) 'தமிழ்நாடு தமிழருக்கே' என்றார். இது தேசிய ஒருமைப்பாட்டிற்கே (National Integration) எதிரானதாகும். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகள் பேசப் பெறும் பகுதிகள் ஒன்றிணைக்கப்பட்டுத் 'திராவிட நாடு' என்று அழைக்கப்பட வேண்டுமென்றும், அதற்கு அரசியல் தன்னுரிமை (Political Independance) வழங்கப்பட வேண்டுமென்றும் விரும்பினார்.'

'1947, ஆகத்து 15 - தன்னுரிமை நாளைத் துன்ப நாளாகப் பெரியார் அறிவித்தார். ஆனால், சி. என். அண்ணாத்துரை அதனை ஏற்கவில்லை. இதுவே, அவரின் பிளவிற்கு ஒரு கரணியமாயமைந்தது.'

'தி. மு. க.வின் இந்தியெதிர்ப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியை எதிர்த்து உயிர் நீத்தோரின் பட்டியல் தரப்பட்டுள்ளது. இச்செய்திகளைப் படிக்கும் மாணவர்கள் கிளர்ந்தெழுந்து மீண்டும் ஒரு கிளர்ச்சியைத் தொடங்குவதற்கு அணியமாவர்.''

''1950-இல் வடநாட்டினரால் (North Indians) நடத்தப் பெறும் கடைகளைப் புறக்கணிக்க வேண்டுமென்று பெரியார் தூண்டிவிட்டதாகக் கூறப்படும் செய்தி முற்றிலுமாக நீக்கப் பெறல் வேண்டும். தேசிய ஒருமைப்பாட்டிற்கே இஃது எதிரானதாகும்.''

''1955-இல் கட்டாய இந்தித் திணிப்பு, பெரியார் தேசியக் கொடியை எரிக்கத் தூண்டியதென்றும், அதே கரணியத்திற்காக 1957-இல் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத் தீயிலிட்டாரென்றும், இந்நூலில் காணப்படுகிறது. இச்செய்தியை மாணவர் அறிந்து கொள்ள நேர்ந்தால் நாட்டுப் பற்றே மறைந்து விடுமென்று அஞ்சுகிறேன். (If a student were to read these lines, I fear that he will lose his loyalty to his country.''

''1957-இல், இராமனை ஓர் ஆரிய மன்னன் என்று கருதி, பெரியார், இராமன் படத்தை எரித்தார். பெரியாரின் இக்கொடிய செயலுக்கு (Wicked action) இந்துக்கள் பலர் மிக வருந்தினர்.''

''தமிழை ஆட்சி மொழியாக்கியது, பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழைப் பயிற்று மொழியாக அறிவித்தது, சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றம் செய்தது ஆகிய அனைத்தும் தி. மு க.வின் ஈட்டங்கள் (achievements) என்று இந்நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்'.

இவ் வாய்வுரை(!)யைக்கொண்டே 'தமிழ்நில வரலாறு' தடைசெய்யப்பட்டது. ஏறத்தாழ இருபது திங்கள் கழிந்த பின்னர் நூலை மீண்டும் வெளிக்கொணரச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1977-ஆம் ஆண்டு நவம்பர்த்திங்களில் சில திருத்தங்களுடன் வெளியிடலாமென்று கட்டளை வேண்டி முதலமைச்சர்க்கு அனுப்பப்பட்டது. ஏறத்தாழ ஐந்தாண்டுகள் முதலமைச்சரின் 'அணுக்கத் தொண்டர்களின்' ஆராய்ச்சி(!)ப் பார்வையிலிருந்து மீண்டபின்னர் ஒரேயடியாக நூலை ஒழித்து விட்டனர்.

தமிழினத்தின் நலனுக்காக அமைந்த அமரர்(!) அண்ணா(?) அரசு, தமிழின வரலாற்றை மெய்யாய்த் தந்த நூலைத் தடை செய்து விட்டுச் சங்கர ஆச்சாரிகளுக்குச் சாமரம் வீசுவதை இனம் கண்டு கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் சிந்திப்பார்களாக!

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்.

தலைமையகம், சென்னை—5.

கழக முதல்வரின் அறிக்கை.

மாவட்ட, வட்டப் பொறுப்பாளர்களுக்கு,

பேரன்புடைய இனிய தமிழ நெஞ்சங்களே!

வணக்கம்.

ஏற்கனவே அமைந்துள்ள அனைத்துப் பொறுப்புகளையும் கட்டுக்கோப்பான, ஒருநடைமுறைக்குக் கொண்டுவரும் முயற்சியில் பெரிதும் ஈடுபட்டுள்ளேன். இதற்கிடையில் தேவையற்ற சில பொறுப்புகளையும் தவிர்க்க எண்ணியுள்ளேன்.

இது தொடர்பான நடைமுறை மாற்றங்கள் படிப்படியாக அறிவிக்கப்பெறும். இனிமேல், என் முயற்சிகள் அனைத்தும் இயக்கத்தை வலிவாக் அமைப்பதிலும், அதன் செய்தியிதழாகிய 'தமிழ்நில'த்தைக் கால இடையீடின்றி மிகப் பரவலான முறையில் வெளிக்கொணர்வதிலும் ஈடுபடுத்தப்பெறும், 1985க்குள் இவ்வியக்கம், தான் கொண்ட குறிக்கோளில், தமிழகத்தின் மிகப்பெரிய செயலியக்கமாக இயங்கவேண்டும் என்னும் தணியாத ஆர்வம் என்னுள் இருந்துகொண்டே உள்ளது. முடியுமா முடியாதா என்பது பற்றி நான் கவலைப்படவில்லை.

இயக்கம் தோன்றுவதற்கு முன்பே இதற்கான எதிர்நிலை உணர்வுகளும், மாறான போக்குகளும், எல்லா இயக்கங்களுக்கும் வந்துவாய்ப்பன போலவே, இதற்கும் வந்து, இதன் செயற்பாடுகளுக்கும் பெரிதும் தடையாக அமைந்துள்ளன. அவையெல்லாம் பொருட்படுத்தக் கூடியனவோ, என் ஊக்கத்தைக் குறைப்பனவோ அல்ல. அவையெல்லாம் நான் எதிர்பார்த்தவைதாம்.

எதிர்ப்புகளும், ஊடறுப்புகளும் எவ்வகையில் இருப்பினும், நம் இயக்கத்தை மிக மிகக் கட்டுப்பாடானதும், கண்டிப்புள்ளதும், ஒரு படைத்துறை அமைப்புப் போன்றதுமான ஒரு நெறிமுறை ஒழுங்கில் மிகவும் சதுரப்பாடான வகையில் அமைக்க விரும்புகிறேன். இது முழுக்க முழுக்க ஒரு பொதுமக்கள் இயக்கமாகவே இருக்கும் என்று உறுதியளிக்கின்றேன்.

இது தொடர்பான அனைத்து நெறிமுறைகளும் வரும் ஏப்பிரல் மாத இறுதிக்குள் அமைக்கப் பெற்று விடும். அதன்பின் தமிழ்நாடெங்கிலும், பிறமாநிலங்கள், வெளிநாடுகள் அனைத்திலும், உறுப்பினர்கள் சேர்ப்பதும், கிளைகள் தொடங்குவதுமான பணிகள் விறுவிறுப்பாக நடைபெறும்.

அதற்குள் ஆங்காங்குள்ள மாவட்ட அமைப்பாளர்கள் அவ்வம் மாவட்டங்களில் உள்ள அனைத்து வட்டக் கிளைகளையும் நிறைவுற அமைத்துக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

தமிழர்களின், தமிழகத்தின் எதிர்கால நன்மை கருதி இவ்வியக்கம் தொடங்கப் பெற்றுள்ளதென்பதையும், அதனாலேயே நாட்டின் அன்றாட நடைமுறைச் சிக்கல்களில் நாம் பெரிதும் பங்கேற்க முயற்சி செய்யவில்லை என்பதையும், இருப்பினும் இயக்கம் நிறைவுற அமைக்கப்பெற்றபின், உடனடித் தேவையான பொதுநல நோக்கங்களின் அடிப்படையில் வெளிப்படையான சில வினைப்பாடுகளிலும் போராட்டங்களிலும் கழகம் ஈடுபடும் என்பதையும்' அதுவரை அன்பர்கள் அமைந்திருக்கவேண்டும் என்பதையும் அனைவர்க்கும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து!

அன்பர்கள் அனைவர்க்கும் என் வாழ்த்தும் நன்றியும்.

சென்னை-5.
13-1-83

அன்புள்ள
பெருஞ்சித்திரன்
கழக முதலவர்

''அண்ணா!''

''என்ன தம்பி?''

''தினமணி சுடர் பல சரக்குப் பகுதியில் நயன்மைக் கட்சித் தலைவர் திரு. தியாகராயரைப் பற்றி எழுதியிருப்பதைப் பார்த்தீர்களா?''

''பார்த்தேன். ''வெள்ளையனே வெளியேறாதே!'' இந்தியாவிலேயே இரு'' என்ற முழக்கத்தைக் கிளப்பி, அவன் கால்களைப் பிடித்துக்கொண்டிருந்த ஓர் அரசியல் கட்சியைச் சேர்ந்த முகாமையானவரான திரு. தியாகராயச் செட்டியார்— என்று எழுதியிருக்கிறார்கள்.''

''அண்ணா எனக்கு ஓர் ஐயம்!''

''சொல் தம்பி,''

''வெள்ளையன் காலத்தில் முதன் முதலில் ஆங்கிலம் கற்று அவனிடம் வேலைக்கு அமர்ந்து எல்லா அரசுப் பணிகளிலும் நிரம்பியிருந்த ஒரு கூட்டம் அவனுடைய கால்களைப் பிடிக்காமல் வேறு எதைப் பிடித்துக் கொண்டிருந்ததோ?''

''எனக்குத் தெரியாது தம்பி!''

—தமிழவேள்.

உ. த. மு. க.வின் உயர்ந்த கொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்.
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல், அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவுஎண். TN/MS(C)\657

அனுப்புதல்:
'தமிழ் நிலம்'
5, அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5.

உறுப்பினர்.
ஆண்டு கட்டணம் ரூ. 36/-
அரையாண்டு கட்டணம் ரூ. 18/-

பெறுநர். நூல் அஞ்சல்

திரு / திருவாட்டி.

ஆசிரியரும், வெளியிடுபவரும் : பாவலரேறு பெருஞ்சித்திரனார், அச்சிடுவோர்
'தென்மொழி' அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.